பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

**A/L 91**
இரசாயனவியல்
By
திரு. சண்
பௌதிகவியல்
திரு. சோதி
தூய/பிரயோக கணிதம்
திரு. வெக்டர்
**எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலை.**

# உதயன்

விலை ரூ2/50

**A/L 91**
பொருளியல்
திரு. லோகசிங்கம்
கணக்கியல்
திரு. மரியதாஸ்
வர்த்தகம்
திரு. தேவா
அளவையியல்
திரு. விச்சி
**எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலை**

சுடர்: 4 விபவ ஞூ பங்குனி மீ 31 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 05 (13 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-108

# விஜயவீரவை எந்த இடத்திலும் சந்தித்துப் பேச பிரேமா தயார்!

## ஜே.வி.பி. பெயரிடும் பிரதிநிதியுடன் அல்லது கட்சியுடனும் பேசுவாராம்

கொழும்பு ஏப்ரல் 13

**ஜே. வி பியின் (மக்கள் விடுதலை முன்னணியின்) தலைவர் திரு. ரோஹண விஜயவீரவை அல்லது செயலாளர் திரு. உபதிஸ்ஸ கமநாயக்காவை எந்த இடத்திலும் நேரில் சந்தித்துப் பேச ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச தயாராக இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

**ஜே. வி. பியின் உயர்மட்டத் தலைவர்கள் இரண்டு பேரும் பேச்சுவார்த்தைக்கு வருவது சாத்தியம் இல்லையெனில்—**

**அவர்கள் பெயர் குறிப்பிடும் பிரதிநிதிகளுடனோ அல்லது அரசியல் கட்சிகளுடனோ பேசவும் ஜனாதிபதி தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை அரசாங்கத்தின் ஒருதலைப்பட்ச ஒரு வார கால யுத்த நிறுத்தம் நேற்றுக் காலை ஆறுமணிக்கு ஆரம்பமாகிய பின்னர், நண்பகலில் அரசாங்கம் இந்த நேரடிப் பேச்சுக்கான அழைப்பை விடுத்தது.

அரசாங்கத்தின் சார்பில் வெளியுறவு அமைச்சரும், பாதுகாப்புத் துணைஅமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின பிரஸ்தாப அறிக்கையை விடுத்தார்.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:—

ஜே. வி. பி. தலைவரான ரோஹண விஜேவீர, அல்லது பொதுச் செயலாளரான உபதிஸ்ஸ கமநாயக—அல்லது அவர்கள் இருவருக்கும் ஜனாதிபதியைச் சந்திக்கும்படி அழைப்பு விடுவதில் அரசாங்கம் மகிழ்ச்சி கொள்கிறது.

ஜனாதிபதியின் கூற்றில் உள்ள உண்மையும் நேர்மையும் வெளிப்படையாகவே புலப்படுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணித் தலைவர்கள் பேச்சுக்களுக்கு வருவது சாத்தியமில்லையாயின் முறைப்படி ஒப்புதல்பெற்ற பிரதிநிதி ஒருவரின் பெயரை அறிவிக்கும்படி அரசு மக்கள் விடுதலை முன்னணியைக்கேட்டுக்கொள்கிறது'

ம. வி. முன்னணி விரும்பினால் எந்தவொரு அரசியல் கட்சித் தலைவரையும் இப்பேச்சுக்களுக்கு அழைக்க ஜனாதிபதி தயாராக இருக்கிறார்.

மக்கள் விடுதலை முன்னணி கேட்டுக்கொள்ளும் வேறு எந்த நபர்களையும் பேச்சுக்களுக்கு அழைக்கவும் ஜனாதிபதி தயாராக இருக்கிறார்.

மக்கள் விடுதலை முன்னணித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அ. தி. மு. க. உறுப்பினர் ச.சபை வளாகத்துக்குள்ளும் செல்ல சபாநாயகர் தடை!

சென்னை, ஏப்ரல் 13

இடைநிறுத்தம் செய்யப்பட்ட அ. தி. மு. க. சட்ட சபை உறுப்பினர்கள் தடையுத்தரவு காலாவதியாகும் வரை சட்ட சபை வளாகத்துக்கு உள்ளே வரக்கூடாது என்று நேற்று சபாநாயகர் தமிழ்க் குடிமகன் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் தொடக்கம் ஒரு வார காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்ட அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் எதிர்க் கட்சித் தலைவியின் அலுவலகத்தினுள் அமர்ந்திருந்தனர் என்ற விஷயம் சுட்டிக் காட்டப்பட்டது.

அப்போதே சபாநாயகர் இப்படித் தெரிவித்தார். [ஒ-எ]

## சாக்கில் போட்டுக் கட்டி தாக்கினர் சிப்பாய்கள்
### தமிழருக்கு நேர்ந்த கதி

மட்டக்களப்பு, ஏப். 12

பூஸா முகாமிலிருந்து விடுதலையானவர்களை உயரதிகாரி சந்திக்க விரும்புகிறார் எனக் கூறி எம்மை அழைத்துச் சென்று, இராணுவ முகாம்களில் சாக்குக்குள் போட்டு கட்டி வைத்துச் சிப்பாய்கள் தாக்கினார்கள்.

மேற்சண்டவாறு பொலன்னறுவ மாவட்டத்திலுள்ள முத்துக்கல் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழைச்சேனைக்கு வந்துள்ள இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

கடந்த மாத இறுதியில் திருக்கோணமடு கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து எமது கிராம மக்கள் ஸ்ரீலங்கா படையினராலும் சிங்களக் குண்டர்களாலும் அச்சுறுத்தப்பட்டு வந்தனர்.

பாபு என்றழைக்கப்படும் ஆனந்தராஜா (25) என்ற வாலிபர் நகருக்கு சென்ற சமயம் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து படையினர் அழைத்துச்சென்ற க. முருகநாதன் (28), சு. தாமோதரம் (28) ஆகிய குடும்பஸ்தர்கள் பற்றித் தகவல்கள் இல்லை.

கடந்த 2ஆம் திகதி கிராமத்திற்கு வந்த படையினர் பூஸா

8 ஆம் பக்கம் பார்க்க;

## யாழ்நகரில் நேற்று இருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

யாழ்நகரப் பகுதியில் நேற்று இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று (புதன்கிழமை) காலை 7. 30 மணியளவில் யாழ். சர்வோதய அலுவலகத்தடியில் வைத்து நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் சில்லாலையைச் சேர்ந்த விக்டர் இம்மானுவல் [வயது 28) எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் யாழ். இராசாவின் தோட்டம் பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இறந்தவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. [ஒ-9]

## புற்றுநோயாளர் நிவாரணம்; சமூகசேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் தங்களுக்குரிய பொது உதவிப்பணம் பெறுவது சம்பந்தமாக அவ்வப் பகுதி சமூகசேவைகள் உத்தியோகத்தர்களுடன் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

புற்று நோயாளிகள், யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வீ. கிருஷ்ணராஜாவிடம் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்ற பின்னர் அடையாள அட்டைகளுடனும் உணவுமுத்திரைகளுடனும் மேற்படி உத்தியோகத்தர்களைச் சந்தித்து நிவாரண விவரங்களை அறிந்து கொள்ளலாம்

சமூக சேவைகள் உத்தியோகத்தர்களை செவ்வாய்க்கிழமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் நேற்று தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

நேற்று, புத்தூர் கந்த சுவாமி கோயிலை அண்மித்த பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இளம் வயதினர் பலத்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பின் காரணமாக நேற்றுக் காலையில் பருத்தித்துறை, அச்சுவேலிப் பகுதிகளுக்கான போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.

ஆயினும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. [ஒ-9]

### நீர்வேலியிலும்

நேற்றுக் காலை நீர்வேலிப் பகுதியை அமைதிப்படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். இதனால் காலை 8.00 மணிவரை இப்பகுதியினூடாகப் போக்குவரத்து நடைபெறவில்லை.

பருத்தித்துறை செல்லும் வாகனங்கள் யாவும் கோப்பாய்ச் சந்தியினூடாகத் திருப்பிவிடப்பட்டன. [ஒ-72]

## ஜே. வி. பி. இன்னும் கருத்துக் கூறவில்லை!

இலங்கை அரசின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் குறித்து ஜே. வி. பி இயக்கம் அதிகாரபூர்வமாக கருத்து எதையும் நேற்று மாலை வரை தெரிவிக்கவில்லை என்று கொழும்பில் ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன (அ-எ)

## யுத்த நிறுத்தம்: இல. அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயானதாம்
### இப்படிக் கருத்துச் சொல்கிறார் இந்திய அதிகாரி

புதுடில்லி, ஏப் 13

இலங்கை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள அமைதிப்படையினர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சரணடைவதற்கான எந்த நடவடிக்கைக்கும் ஊறுவிளைவிக்கக் கூடிய எந்த ஒரு காரியத்தையும் செய்யமாட்டார்கள் என்று புதுடில்லியில் அரசு அதிகாரி ஒருவர் நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

இலங்கை அரசு அறிவித்த ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் பற்றி செய்தியாளர் கேட்ட கேள்விகளுக்கு அரசு அதிகாரி பதிலளித்தார்.

தற்போதைய போர் நிறுத்தம் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தாருக்கும் இடையேயான ஒரு விஷயம்.

தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வந்து சரணடைவதற்கு தயாராக இருப்பதான அறிகுறிகளோ தகவல்களோ இந்தியாவிடம் இல்லை.

ஆயினும் சரணடைவோருக்கு எல்லா உதவிகளையும் அமைதிப்படையினர் அளிப்பர்— இப்படி அந்த இந்திய அரசு அதிகாரிதெரிவித்தார். [அ-எ]

## தமிழருக்குத் தனிநாடு அமைந்தால் மட்டுமே புலிகள் போர் நிறுத்தம்

கொழும்பு, ஏப்ரல் 13

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்து ஆயுதங்களைப் பறிக்க இந்திய-இலங்கை அரசுகள் செய்திருக்கும் தந்திரமே இந்தப் போர் நிறுத்தம்.

''இலங்கையில் இருக்கும் இந்தியப் படையினர் 50 ஆயிரம் பேரும் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும். இலங்கைத் தமிழருக்கு என்று தனிநாடு அமைந்திட வேண்டும்.

''அப்போதுதான் ஒரு போர் நிறுத்தத்தை எம்மால் ஏற்க முடியும்.

''அப்படி ஓர் சூழ்நிலை ஏற்படும்போது ஒரு போர் நிறுத்தத்திற்கோ, ஆயுதப் போராட்டத்திற்கோ இடமே இல்லை.''-

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஏஜன்சி செய்தி ஒன்று தெரிவித்தது.

## புதுவருடப் பிறப்பு

**புதிய சுக்கில வருடம் பிறக்கும் நேரம்**

13-4-89 வியாழக்கிழமை மாலை மணி 6-57. பூர்வ பட்க்ஷ அட்டமி.

**விஷு புண்ணிய காலம்:**

பிற்பகல் 2.57 மணி முதல் இரவு 10.57 மணிவரை

**அணியவேண்டிய ஆடை:**

வெள்ளை நிறப்பட்டாடை அல்லது மஞ்சட்கரை, பொற்கரையமைந்த ஆடை.

(3 ஆம் பக்கத்தில் மேலதிக விவரங்கள்)

## விசேட ரயில் இன்று வரும்

யாழ்ப்பாணம், ஏப். 13

புதுவருட தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட விசேட பயணிகள் ரயில் இன்று யாழ். நகருக்கு வந்து சேரும்.

இந்த ரயில் நாளைக் காலை 9 மணிக்கு இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும். (ஒ-9)

## 'நியூஸ்வீக்' சஞ்சிகைக்குதடை

கொழும்பு, ஏப். 13

இம்மாத 3ஆம் திகதிய அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ்வீக்'கைத் தடைசெய்யுமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்

(8 ஆம் பக்சம் பார்க்க)

## இன்று தொண்டர் படையின் அணிவகுப்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

புதிதாகத் திரட்டப்பட்ட மக்கள் தொண்டர்படையின் முதலாவது தொகுதியினர் பயிற்சி முடிந்து வெளியேறும் அணிவகுப்பு வைபவம் இன்று வியாழக்கிழமை காலை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் அணிவகுப்பு வைபவத்தில் மக்கள் தொண்டர் படையின் கொமாண்டரான திரு. எஸ். ஆனந்தராஜா [பொலீஸ் அதிபர்] பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விசேடமாக அழைக்கப்பட்ட விருந்தினர்களும் இந்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## சுபநேரம்

13 - 04 - 1989

பங்குனி - 31 வியாழக்கிழமை சுபநேரம்.

07 - 36 முதல் 09 - 06 வரை

ராகுகாலம்.

01 - 36 முதல் 03 06 வரை

முதல் நாள் அட்டமி

## மௌனம் தொடர்கிறது!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

இலங்கை அரசாங்கத்தின் யுத்த நிறுத்தம் நேற்றுக்காலை அமுலுக்கு வந்துவிட்ட போதிலும், நேற்று இரவு வரை இந்திய அரசு, போர் நிறுத்தத்தில் தனது நிலை என்ன என்பதைத் தெரிவிக்கவில்லை.

தொடர்ந்தும் மௌனம் சாதித்து வந்தது. உத்தியோகபூர்வமாக எவ்வித கருத்தும் வெளியிடவில்லை.

யாழ்ப்பாணம் நகரக் கொமாண்டர் அலுவலகத்திடம் இது குறித்து வினவிய போது, (இச் செய்தி எழுதப்படும் வரை) யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறும் உத்தரவு எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

## முச்சந்தி முரளி



தமிழரை அடிக்கிற ஆசை இலங்கை இராணுவத்துக்கு ஒருபோதும் விட்டுப் போகாதா பின்னே......!

## மருதடியில் நாளை தேர்

மானிப்பாய், ஏப் 13

நாளை வெள்ளிக்கிழமை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இரதோற்சவ விழா நடைபெறும்.

அன்று காலை 9. 30 மணிக்கு ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு விசேட அபிஷேக பூசைகள் நடைபெற்று பகல் 12.15 மணிக்கு பஞ்சமுக விநாயகர் சித்திரத் தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

(தேர்த் திருவிழா சிறப்பு மலர் உள்ளே 4 ஆம் 5 ஆம் பக்கங்களில்)

இளைய தலைமுறையின் இதயம் [illegible] இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பெற்ரோலில் இயங்கும் காட்டுமரங்கள், பனைமரங்கள் தறிக்கும் புதிய இயந்திரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.கண்ணன், கல்வளை, சண்டிலிப்பாய். (101]

வீடியோ கமெரா JVC GXN 70E, நஷனல் டெக் 180, வீடியோ மிக்ஷர் SI மொடல் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: புலவர் வீடியோ, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (10528)

பாவித்த வேம்பு அலுமாரி, கட்டில், மேசைகள், கண்ணாடி அலுமாரி, Show - case, சிங்கர் மெஷின், T. V. Fan, கசற், றேடியோ, சொப்பர் Hero, Children Bicycle மணிக்கூட்டுக் கடைகளுக்கு ஏற்ற கபேட், மேசை மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை வீதி, அரசடிச் சந்தி, யாழ்ப்பாணம். [10334]

### FOR SALE

Chopper 'Kenstar' Konda 125 C. C, Ladies Bicycles 20'' & 18'' Gents Bicycles 22'' 'Lumala' for Sale. 144, Arasady Road, Kanthar-madam, Jaffna. (10541)

### மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!! புதுவருட மலிவு விற்பனை (4- 4-89 - 13-4-89,) புதியடிசைன்ஸ்கேட், பிளவுஸ் Baby Shirt, Baby Frocks, சிறிய கவுண்கள் மற்றும் றெடிமேட் ஆடைகள், 'Fashion Garments'' 20, 22, கடைச்சாமிவீதி, (Off Navalar Road), யாழ்ப்பாணம். (10502)

### கொங்கிறீற் கற்கள் விற்பனை

4'' கனம் கொங்கிறீற் கற்கள் தரமான முறையில் கலந்து அரிந்து நீரில் பதப்படுத்தப்பட்டவை விற்பனைக்கு உண்டு. பெரிய ஓடர்கள் 4'' 5'' கனம் 3'' கற்களுக்கு ஏற்கப்படும். ஆனந் பண்ணை. கட்டுவன் வீதி, மயிலிட்டி. (10545]

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் விற்பனை செய்யப்படும். 10728)

### தேவை

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட பிஸ்கட் பைக்கிங் சென்ரருக்கு விற்பனைப் பிரதிநிதியாகவும், பைக்கட்டிங் செய்பவராகவும், யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. உடன் சமுகம்தரவும். விலாசம்: 144/2, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (140)

கிளிநொச்சி கண்டி வீதியில் அமைந்திருக்கும் பிரபல ஒட்டல் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த ரொட்டி தயாரிப்பாளர்கள். இடியப்பம் தயாரிப்பாளர்கள், வெயிட்டர்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். விபரங்களுக்கு: ஹூட்லண்ட்ஸ் டி ஹோட்டல், கண்டி வீதி, கிளிநொச்சி. (10537)

உதவிஏஜென்டுகள் - பெண்கள் மாதம் ரூபா 1600-2400 வரை கொமிஷனாக பெறவழி உண்டு. எவரும் விண்ணப்பிக்கலாம். நேரில் ஆபீஸ் வந்து விபரங்களைப்பெற்றும், பெயர்களைப் பதிவு செய்யலாம். ராஜா ரூர்ஸ், 168/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (119)

யாழ்நகரிலுள்ள பிரபலமான நகைக்கடை ஒன்றுக்கு சகல நகைவேலைகளும் தெரிந்த நகைத் தொழிலாளி ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் பிணைப்பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 481. மே/பா உதயன், யாழ்ப்பாணம். 124)

### மேசன் தொழிலாளர் தேவை

மேசன்மாரும் உதவியாளரும் வெளி இடத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது. உணவும் தங்கும் இட வசதியும் உண்டு. வேலைக்கு ஏற்ற கூலி வழங்கப்படும். தொடர்பு: V. S. தங்கராசா கட்டிட அமைப்பாளர், முருகன் இல்லம், தும்பளை, பருத்தித்துறை. (10513

### தவறிவிட்டது

கட்டுவன் மல்லாகம் வீதியில் ஒரு தொகைப்பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந. யோகராசா சகுந்தலா, மெற்றல் வேக்ஸ், குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (135)

Alfred Balendran Asbary [Anderson Flats Narahenpitiya] ஆகியஎனது 440311806X இலக்க தேசிய அடையாள அட்டை 07- 04- 89ஆந் திகதி சிந்தங்கேணிச் சந்திக்கும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சேர்ச் லேன், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவும். (131)

T. லோகநாதன் ஆகிய எனது சிமெந்துக் கூட்டுத்தாபன அடையாள அட்டை இல. 3422 10- 4- 89இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 40/1, கலைமகள் வீதி, அரியாலை என்ற விலாசத்தில் அல்லது உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும் (10547)

### எவர்சில்வர் தயாரிப்புக்கள்

எங்கும் கிடைக்கின்றன. Rajz Brand எவர்சில்வர் தயாரிப்புக்கள் உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமதி. தலைமுறை தலைமுறையாக நிலைத்து நின்று பயன் தருபவை Rajz Brand Tea set Dinner set (Round, Dinner set (Oval, Boiler Hot plate Lunch boxes Lunch carriers Cooking pans Thookuch addies, Office table Tray with pen holders இன்னும் பற்பல. காட்சி அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C/1909)

### விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம். திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### UPLANDS FARM

(Lohmann Dekalb) பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவல்குஞ்சுகள் சகாய விலைக்கு (12-04-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது தடுப்பூசி போடப்பட்டது முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) [48]

---

# A/L 89

## தூயகணிதம்

தளக்கேத்திர கணிதம் (Plane)
திண்ம கேத்திர கணிதம் (Solid)

## பிரயோக கணிதம்

எளிமை இசை இயக்கம் (S. H. M)

**ஆரம்பம்: 17 - 04 - 89**
திங்கள் காலை 6.15 a.m

ஆசிரியர்: திரு. கிருஷ்ணு (B. Sc.)

**NIRU TUITION CENTRE**
Kondavil West,
KONDAVIL

[சி-2256]

---

★ எமது நேற்றைய வெளியீடுகள்

(1) ராமராஜன் — கௌதமி
**பொங்கி வரும் காவேரி**
PYRAMID

(2) அர்ஜுன் — பவ்யா
**தாய்க் கேற்ற தனயன்**
PYRAMID

(3) அர்ஜுன் - அர்ச்சனு
**எங்க ஊர் தலைவன்**
PYRAMID

(4) சரத்பாபு — சரண்யா
**அன்று பெய்த மழையில்**
PYRAMID (சினிமாஸ் கோப்

**குணர்** வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 [C/2098]

---

# பராமரிப்பாளர் வெற்றிடம்

யாழ் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர், பராமரிப்பாளர் பதவிகளுக்கு பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றார்.

**இப்பதவி நிரந்தரமானதல்ல.**

**வயது: 18 — 40 வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாவர்.**

**கல்வித் தகைமை:**

**8 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

வெற்றிடங்கள் சுன்னாகம், வட்டுக்கோட்டை, பலாலி, உரும்பராய், காங்கேசன்துறை, தொல்புரம் பகுதிகளிலுள்ள மத்திய மருந்தகங்களில் உள்ளதால் அச் சுற்றுடலில் வசிக்கும் விண்ணப்பதாரர்களே மத்திய மருந்தக பதிவுவைத்தியரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். சம்பளம் மாதாந்தம் 375 ரூபா நிலையான படியாக வழங்கப்படும். அத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியும் சேர்த்து வழங்கப்படும். விண்ணப்பங்கள், முழுப்பெயர், விலாசம், வயது, தகைமை என்பவற்றை உள்ளடக்கியதாக முழுத்தாள் அளவிலான கடதாசியில் நிரப்பப்பட்டு மேற்கூறிய வெற்றிடப் பகுதியிலுள்ள மத்திய மருந்தக பதிவு வைத்தியரின் சிபார்சுடன் இப் பணிமனைக்கு அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் 21 - 4 - 89க்கு முன் கிடைக்கக்கூடியதாக(நேரிலோ அல்லது தபால் மூலமோ) அனுப்புதல் வேண்டும்.**

**ந. கனகசபை,**
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

சு.சே.பி.ப. பணிமனை,
விக்டோறியா வீதி,
யாழ்ப்பாணம். (சி/2201)

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்

# சோலைவரி அறிவித்தல்
# 1ஆம் கந்தாயம் 1989

1989ஆம் ஆண்டு 1ஆம் கந்தாயத்திற்கான வீதவரி அறவீடு 31 - 03 - 1989 இல் முடிவடைந்தது. தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட கந்தாயத்திற்குரிய வீதவரியைச் செலுத்தும் கால எல்லை 31 - 03 - 1989 இல் இருந்து 30 - 4 - 1989 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இதுவரை வீதவரியைச் செலுத்தத் தவறியவர்கள் உடன் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இத் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வீதவரிக்கு கீழ்க் குறிப்பிட்டவாறு மேலதிகமாக வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

1. வெறுங் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது - 15 %
2. மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது - 20 %

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் விசேட ஆணையாளர், வலி தெற்கு பிரதேச சபை சார்பில் அனுப்பப்படுதல் வேண்டும். அஞ்சற் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன் கூட்டியே அனுப்பப்படுதல் வேண்டும். அப்படி பணம் அனுப்பப்படும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

மற்றும் 1989 - 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாய வீதவரிக் கால எல்லையில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆ. மகாலிங்கம்,**
விசேட ஆணையாளர்,
வலி - தெற்கு பிரதேச சபை.

வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 10. 4. 89 [சி/2255]

---

45 ஆம் நாள்

# அந்தியேட்டி அழைப்பிதழ்

**நல்லையா கிருபாகுமாரன்**

பிறப்பு:- 09- 06- 1967
இறப்பு: 03- 03- 1989

இளைப்பாறிய முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர் திரு. V.K. நல்லையா தம்பதிகளின் அருமைப்புதல்வன் கிருபாகுமாரன் 03-03-89 இல் லண்டனில் அகாலமரணமடைந்தார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும், சபிண்டீகரண கிரியைகளும் 16- 04- 89 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இந்துப் பாடசாலை ஒழுங்கை வல்வெட்டியில் நடைபெற இருப்பதால் அத் தருணம் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெற்றோர், மனைவி, மகள்,
மாமன், மாமி, மச்சான், மச்சாள்

இந்துப்பாடசாலை
ஒழுங்கை,
வல்வெட்டி. (143)

---

**St. John's College, Jaffna.**

# VACANCIES

Vacancies exist for Graduate Teachers (temporary only in Zoology and Physics/Mathematics.

Apply before 24th April, 1989.

**- PRINCIPAL.**

[C-2261]

---

யா / ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் 15 - 04 - 1989 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் மாஜி அதிபர் அமரர் சு. குமாரசுவாமி தினம் கொண்டாடப்படும்; பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- பழைய மாணவர் சங்கம்.**

[10533]

---

## விசுவமடுக்குளம் வாலிப விவசாயத்திட்டம் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தரம் III

**தகைமைகள்:**

1. வயது 25 முதல் 45 வரை
2. கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருத்தல்.
3. G. C. E. A/L கணக்கியல், வர்த்தகம். உட்பட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
4. வேதனம்: கூட்டுறவு சங்க விதிகளுக்கு அமைய வேதனம் வழங்கப்படும்.

**30-4-89 ஆம் திகதிக்கு முன்பதாக**

தலைவர்,
**''விசுவமடு வாலிபதிட்ட கூட்டுறவுச் சங்கம்,''**
விசுவமடு, முல்லைத்தீவு
என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

**- தலைவர்.**

10-4-89. [10536]

---

மன்னார் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் (வ. து)

# வெற்றிடம்

## பொது முகாமையாளர்

(நடுத்தர முகாமை நிலையின் 08ஆவது சம்பளத்திட்டம்)

மேற்குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**வயது:**
23க்கும் 50க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது)

**வேதனம்:**
1305 — 2370
60 × 04 — 75 × 11
(இத்துடன் மாதாந்தம் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி சுட்டெண் அடிப்படையில் வழங்கப்படும்)

**விண்ணப்ப முடிவு திகதி:**
06 - 05 - 89

**அனுப்ப வேண்டிய முகவரி:**
தலைவர்,
மன்னார், பல நோ. கூ. சங்கம்,
வயல் வீதி, மன்னார்.
(பதிவுத் தபால் மூலம்)

தேவையான தராதரம் மற்றும் தகைமைகள் பற்றிய விபரங்களை அண்மையிலுள்ள பல நோ. கூ. சங்கம் மூலம் அறியலாம் அல்லது ரூபா 2/-க்கான தபாற் கட்டளையுடன் சொந்த முகவரியிட்ட தபாலுறையும் எமக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். அன்றேல் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜனுப். எச். எம். நிஸாம்.**
**தலைவர்.**

மன்னார் பல நோ. கூ. சங்கம்,
மன்னார்.
04 - 04 - 1989 [சி-2252]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு மருந்து ஏற்றும் வேலைகள் கிளிநொச்சியில் பெரும் அளவில்

## 40 நிலையங்களில் 30 குழுக்கள் செயற்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13
சுகாதார ஊழியர் பற்றுக் குறையாலும், அண்மைக் கால நிகழ்வுகளாலும் கிளிநொச்சி மாவட்டக் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கைகள் குறைந்துள்ளன.

இக்குறைபாட்டை நீக்க பிரதம தொற்றுநோய்தடுப்பு நிபுணர் டாக்டர் ரஞ்சன்சில்வாவின் ஆலோசனையோடு, யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இம்மாதம் 19 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டம் முழுவதிலும் தடுப்பு மருந்து கொடுக்கும் தினமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தடுப்பு மருந்து ஏற்றும் இரண்டாவது, மூன்றாவது தினங்கள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

19 ஆம் திகதி 40 தடுப்பு மருந்து கொடுக்கும் நிலையங்களில் 30 குழுக்கள் செயற்படும்.

இக்குழுக்களில் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள், கிராமிய சுகாதார உதவியாளர்கள் அங்கம் வகிப்பார்கள்.

கிளிநொச்சிப் பகுதி சுகாதார ஊழியர்களோடு யாழ் மாவட்டத்திலிருந்து 10 சுகாதாரப் பரிசோதகர்களும், 40 குடும்பநல சேவையாளரும் இணைந்து தடுப்புமருந்து கொடுக்கும் சேவையில் ஈடுபடுவார்கள்.

19 ஆம் திகதி காலை 7மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்து கொடுக்கப்படும்.

இச்செயல் திட்டத்தில் பிராந்திய தொற்று நோய்த் தடுப்பு நிபுணரும் தாய்சேய் நல வைத்திய அதிகாரியும் பங்குபற்றுவார்கள்.

யாழ். சுகாதாரக் கல்விஅதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன் இது சம்பந்தமான பிரசார வேலைகளை ஆரம்பித்துள்ளார்

இத்திட்டத்தை நன்கு செயல்படுத்த சுகாதார ஊழியர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-18)



இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்ட மூன்று திட்டங்களுக்கு அமெரிக்கா மேலதிகமாக 1 கோடியே 53 லட்சம் டாலரை (50 கோடியே 47 லட்சம் ரூபா) வழங்குகிறது. இதில் ஒரு கோடி டாலர் வடக்கு- கிழக்கு புனர் வாழ்வு- புனர்நிர்மாண வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும். இது தொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் ஜேம்ஸ் டபிள்யூ ஸ்பெய்னும் நிதி அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் கைச்சாத்திட்ட போது எடுக்கப்பட்ட படம். (இ)

# யாழ்ரனில் பற் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13
காரைநகர் பகுதியிலுள்ள பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கான பற் சிகிச்சை காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் நடைபெற்றது.

இப்பயிற்சித் திட்டத்தில் யாழ்ரன் கல்லூரி, மெய்கண்டான் பாடசாலை, ஆயிலி பாடசாலை, பேரப்பிட்டி பாடசாலை, வியாவில் பாடசாலை ஆகியவை கலந்து கொண்டன.

13 வயதுக்குட்பட்ட மாணவர்களின் பற்சூத்தை முரசு வியாதி உள்ளவர்களுக்கு பற் சுத்தம் செய்தும் அடைத்தும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

சுமார் 1200 மாணவர்கள் பரிசோதனை செய்யப்பட்டு 371 மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

பற்களைப் பேணுவது பற்றிய சுகாதாரக் கல்விப் போதனையும் நடைபெற்றது. (ச)

# முகாம் மூடப்பட்டது

அம்பாறை, ஏப் 13
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூர் அட்டப்பள்ளம் பகுதியில் இயங்கி வந்த இந்திய அமைதிப்படை முகாம் மூடப்பட்டுள்ளது.

இதேவேளை காரைதீவில் உள்ள அமைதிப்படை முகாம் தொடர்ந்தும் இயங்கிவருகின்றது. (ஒ-14)

# தொழில் நுட்பமும் ஒரு கலையே;

## கல்லூரி இயக்குநர் பேச்சு

வட்டுக்கோட்டை, ஏப்.13
'இன்றைய காலகட்டத்தில், கலைகளின் தேவை மிக அவசியம். நுட்பம் என்பது கலையைத்தான் குறிக்கிறது. தொழில் நுட்பமும் ஒரு கலைதான். எந்தத் துறையைப் பயிலுபவராக இருந்தாலும், கலைத் துறையைக் கட்டாயமாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.''

யாழ்ப்பாணக் கல்லூரிப் பல்தொழில் நுட்ப நிறுவனத்தின் இவ்வாண்டுக் கலாசார விழாவில் அதன் இயக்குநர் திரு. எஸ். ஏ. பி. துரைரத்தினம் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியற்பீடத்தலைவர் கலாநிதி திரு. சோ. கிருஷ்ணராஜா விழாவிற் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றும் போது, மனித வரலாற்றின் படிப்படியான வளர்ச்சிக் கட்டங்கள் ஒவ்வொன்றிலும் கலைகள் பின்னிப்பிணைந்து வந்திருக்கின்றன. கலைகளின் தேவை அந்த அளவிற்கு மக்களுக்கு இன்றியமையாததாக உள்ளது. ஆரம்பக் காலத்திலிருந்து மனிதனது பகுத்தறிவும் சிந்தனைப்போக்கும் கலைகளைப் பரந்துபட்ட அளவில் வளர்த்துள்ளன.

தனதுதொழிலையே கலையாகவும், கலையையே தொழிலாகவும் மனிதன் போற்றியும் மதித்தும் வந்திருக்கிறான்.

இப்படி அவர் கூறினார்.

விழாவில் மாணவ-மாணவிகளின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் விதத்தில் பல கலை நிகழ்ச்சிகளும்இடம்பெற்றன.

செல்வன் நரசிம்மன், செல்வன் ஸ்ரீதரன், செல்வன் லிங்கேஸ்வரன், செல்வி பிரியதர்சினி ஆகியோரின் கலைத்துறை ஆற்றல்கள் இரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தன. (க)

# குளம் ஆழமாக்கல்

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 13
கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தினால் நாற்பத்தையாயிரம் ரூபா செலவில் முகமாலை இந்திராபுரம் குளத்தை ஆழமாக்கல் வேலை முடிவடைந்துள்ளது. (ச-117)

# இராமரின் நடை; கிருஷ்ணரின் போதனை; ஒருங்கே தழுவியவர் ஸ்ரீராமகிருஷ்ணர்

## ராமகிருஷ்ண ஜெயந்தி விழாவில் உரை

கொக்குவில், ஏப்ரல் 13
இராமரின் நடை; கிருஷ்ணரின் போதனை; இரண்டையும் பின்பற்றியவர் ஸ்ரீஇராமகிருஷ்ண பரஹம்சர் இன்றைக்குத் தேவையான மன அடக்கத்தை அவர் போதித்தார். இவ் ஆற்றலை வளர்க்க இது போன்ற விழாக்கள் உதவ வேண்டும்.

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய இந்து மாமன்றத்தினர் வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் கொண்டாடிய பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜெயந்தி விழாவில் உரையாற்றும் போது யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. நாகேஸ்வரன் தனது சிறப்புச் சொற்பொழிவில் மேலும் கூறியதாவது:

''இராமகிருஷ்ண பரமஹம்சர் மெத்தப் படித்த மேதாவி அல்லர்; ஆனால் இரக்கமும், கருணையும் மனிதாபிமானமும் மிக்கவர்.

ஒவ்வொரு மனிதனிடமும் இறைவன் இருப்பான் என்பதில் அசையாத நம்பிக்கை உடையவராக இருந்தார்.

பகை, கோபம், வெறுப்பு அச்சம் போன்றவற்றை நீக்கி இவ்வுலகிலே அன்பும் சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டும் எனப் பெரிதும் பாடுபட்டவர்.

எவ்வித ஏற்றத் தாழ்வுகளையும் வேறுபாடுகளையும் பொருட்படுத்தாத அவர் எல்லா மக்களும் உய்யும் வழி பற்றியே என்றும் சிந்தித்தார்.''

இப்படி அவர் கூறினார்

விழாவிற்குத் தலைமை வகித்த வித்தியாலய அதிபர் திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) தனது உரையில் கூறியதாவது:

''இறைவன் ஒருவனே அவனை அடையும் மார்க்கங்கள் தான் பலவுள.

ஒரே இறைவனுக்குப் பல பெயர்கள் சூட்டி பக்தர்கள் வணங்குகிறார்கள்.

தமக்குப் பிடித்த பெயர்களால் இறைவனை அழைக்கவும், தாம் விரும்பும் வழியில் இறைவனைச் சென்றடையவும் இந்து மதத்துக்குச் சுதந்திரமுண்டு.

காலங்காலமாகச் சதிக் வாய்ந்த மதமாக இந்துமதம் திகழ்வதற்கு இதுவே காரணம்''

இப்படி அவர் கூறினார்,

வித்தியாலய மாணவர்கள் செல்வன்கள் குகனேஸ்வரன், எஸ். ஞானசோதி ஆகியோரும் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

மாணவிகளின் வீணைக் கச்சேரியும், பண்ணிசை வேந்தர் வே. சிவஞானத்தின் பக்திப் பாடல்களும் இடம்பெற்றன [ ச-69]


## மின்தறி ஆலை துண்டுக்கூலி பணியாளருக்கான விளம்பரம்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தின் ஜப்பான் மின்தறிகளில் துணி உற்பத்தி செய்வதற்கான நெசவாளர்கள் துண்டுக்கூலி அடிப்படையில் கோரப்படுகின்றனர். இதற்கென அனுபவமிக்க நெசவாளர்கள் தங்கள் விண்ணப்பத்தினை 18-4-89 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். துண்டுக்கூலி விவரம் அறிய விரும்பின், அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்,**
**பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ.கூ. சங்கம்**
**பண்டத்தரிப்பு.**

[C/ 2251]



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**செல்வன் செ. கவிதரன் [கவி]**

✶ 13 - 4 - 1989 ✶

நாவற்காடு அச்சுவேலியில் வசிக்கும் திரு. பொ. செல்லத்துரை தங்கரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் செல்வன் கவிதரன் [கவி] இன்று 1989 - 4 - 13 ஆம் திகதி வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா - அம்மா, சகோதரி கவிதா மற்றும் பெரியப்பா - பெரியம்மா, பெரியண்ணா, சின்னண்ணா சுதாக்கா, மாமா - மாமி, விமல் மச்சான், றஜீகா மச்சாள், அளவெட்டியைச் சேர்ந்த உற்றார், உறவினர்கள். அச்சுவேலியைச் சேர்ந்த உற்றார், உறவினர்கள் எல்லோரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு நலமுடன் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

[10543]


# இன்று பிறக்கின்ற சுக்கில புதுவருடக் கருமம்

## வாக்கிய பஞ்சாங்கம் சொல்வது ..

விபவ வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் நாள் (13-4-89) வியாழக்கிழமை மாலை 6-57 மணிக்கு பூர்வ பக்ஷ அட்டமித் திதியில் பூச நட்சத்திர முதலாம் பாதத்தில் துலா லக்கினத்தில் தனு நவாம்சத்தில் சந்திரன் காலவோரையில், சுக்கிரன் சூக்கும வோரையில் தாமத குண வேளையில் இப்புதிய சுக்கில வருஷம் பிறக்கிறது. அன்றைய தினம் பிற்பகல் மணி 2-57 முதல் இரவு 10-57 மணி வரைக்கும் விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் வேப்பிலையும் காலில் கொன்றையிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாயினும் மஞ்சட்கரை - பொற்கரை அமைந்த ஆடையாயினும் தரித்து சூரியனுக்குப் பொங்கிப் படைத்து பூசைகள் செய்து, தத்தம் குல தெய்வத்தை வணங்கி ஆலய தரிசனம் செய்து இயன்ற தான தருமஞ் செய்து அறுசுவை உண்டு கண்ணாடி, தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து மங்கள கரமாய்ச் சயனித்து—

மறுநாள் சுக்கில வருஷம் சித்திரை முதலாம் நாள் (14-4 89) வெள்ளிக்கிழமை காலை நித்திய நைமித்திக கர்மானுஷ்டானங்களை முடித்து ஆலய தரிசனம் செய்து தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கி, பூஜைகள் செய்து தெய்வ வழிபாடியற்றி சுற்றஞ் சூழ மகிழ்ந்திருந்து மங்களகரமாக வாழ்வார்களாக-

### கைவிசேஷம்

சித்திரை 2 ஆம் திகதி (15 - 4 - 89) சனிக்கிழமை மாலை 4-23 முதல் 5-54 மணி வரைக்குள் கைவிசேஷம் பரிமாறிக்கொள்ளலாம்.

அல்லது

சித்திரை 4 ஆம் திகதி (17-4-89) திங்கட்கிழமை மாலை 4-13 முதல் 5-43 மணி வரைக்குள் கைவிசேஷம் பரிமாறிக் கொள்ளலாம், ★

## திருக்கணித பஞ்சாங்கம் சொல்வது...

விபவ வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் நாள் (13-4-89) வியாழக்கிழமை இரவு 9-40 மணிக்கு புதிய சுக்கில வருஷம் பிறக்கிறது. இது அறுபது வருட சுற்று வட்டத்தில் 3 ஆவது வருடமாகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் விருச்சிகம். நட்சத்திரம் பூசம் 2 ஆம் பாதம். அன்று மாலை 5-40 மணி முதல் இரவு 1-40 மணிவரை மேஷ சங்கிரமண புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து தலையில் கொன்றலிலையும், காலில் புங்கமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து மஞ்சள் நிறப் பட்டாயினும் அல்லது மஞ்சட்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினுந் தரித்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து விநாயகர் முதலிய இஷ்ட தெய்வ வழிபாடாற்றி பெரியோர்களை வணங்கி அறுசுவையுண்டு அளவளாவி மகிழ்ந்து சயனித்து—

மறுநாள் சுக்கில வருஷம் சித்திரை முதலாம் நாள் (14-4-89) வெள்ளிக்கிழமை சூரியோதயத்தின் முன் நித்திரை விட்டெழுந்து முன்போல ஸ்நானஞ் செய்து, தேவாலய தரிசனம் மேற்கொண்டு தத்தம் இல்லங்களில் சூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்து முன்போல் போசனம் முடித்து மங்களகரமாக வாழ்வார்களாக

### கைவிசேஷம்

சித்திரை 2 ஆம் திகதி (15-4-89) சனிக்கிழமை இரவு 8-16 முதல் 9-04 மணி வரைக்குள் கைவிசேஷம் பரிமாறலாம்.

அல்லது

சித்திரை 4 ஆம் திகதி 17 4-1989] திங்கட்கிழமை இரவு12 -27 முதல் 1-15 மணி வரைக்கும் கைவிஷேசம் பரிமாறிக் கொள்ளலாம் ★


## AJANTHA JEWELLERS

Gold Jewellers & Gem Merchants
138/4, Temple Road.
Nallur North Weethy;
JAFFNA.

✶ அன்பர்கள்
✶ ஆதரவாளர்கள்
✶ வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும் எமது

**இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்**



உறுதியும் உத்தரவாதமுமுள்ள தங்க நகைகள்

குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள் :

★ அஜந்தா ஜுவல்லர்ஸ் ★

[10535]



## ★ கம்பியூட்டர் பயிற்சி ★

**OSLO SCIENCE ACADEMY இல்**

(பருத்தித்துறை வீதி, கொத்தாவத்தை, காங்கேசன்துறை.)

16 - 04 - 89 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் Computer, Spoken English வகுப்புகளுக்கு வர இருப்பவர்கள் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு முன் கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

[129]



## WANTED

A Lady Clerk with Experience for our Institute

Age: More than 25 Years
Typing will be added Qualification.

Apply:

**North Ceylon Technical Institute**
14. st. Peter's Lane.
JAFFNA

[C-2262]



## புற்று நோயாளர் ★ நிதிக்காக ★

பரியோவான் கல்லூரி லியோ கழகம்
எதிர்வரும் 14-4-89 புதுவருடத்தன்று (வெள்ளிக்கிழமை) நடைபெறும்
மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் தேர் உற்சவத்தன்று உண்டியல் மூலம் நிதி சேர்ப்பதற்கு பொது மக்களின ஆதரவை நாடுகின்றோம்.

- பரியோவான் லியோ கழகம்

[10548]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய தேர்த் திருவிழா சிறப்பு மலர் ★


மருதடி விநாயகர் ரதமேறி வரும்
புத்தாண்டு நன்னாளில்

அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது புத்தாண்டு நல் வாழ்த்துகள்!



தரமானது
சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே
வாங்குங்கள்



இரத பவனி வந்து
எம் துயரம் போக்கிடுவாய்
ஞான விநாயகா!

வாடிக்கையாளர்கள் அனைவரையும்
வாழ்த்துபவர்கள்

மல்லிகா கிறீம் ஹவுஸ்
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.



மருதடி விநாயகரின் அருள் வேண்டி
எமது புத்தாண்டு வாழ்த்துக்களை

நண்பர்கள் அனைவருக்கும்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சிவா எலெக்ரிக்கல்ஸ் ஸ்ரோர்ஸ்
(SIVA ELECTRICAL STORES)

635, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.



மருதடி விநாயகரின் அருள் வேண்டுகின்றோம்!

ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அதி நுட்ப
யப்பானிய முறைத் தயாரிப்புகள்

- ஜோன்சன் என். சீ. தின்னர்
- ,, மரப்பாதுகாப்பி
- ,, மினறல் தெர்பந்தைலம்
- ,, ட. பீ. சீ. தார்
- ,, வீக் ஸ்ரொப்
- நோத் ஸ்ரார் மரப் பாதுகாப்பி
- ,, கப்பல் தார்
- ,, மினறல் தெர்பந்தைலம்
- லங்கா கிறீஸ்
- டொர்னூ மெதலேற்றட் ஸ்பிறிட்

ஆகியவற்றுக்கு

வட மாகாண விநியோகஸ்தர்கள்:

நோத் ஸ்ரார்
குறூப் கம்பனிகள்,
ஜோன்சன்
அன் கம்பனி லிமிற்றெட்,

மேதர்ஸ் பிளேஸ், மானிப்பாய். பியகம றேட், களனியா.


## மருதடி விநாயகரின் மகிமையும் சிற்பத்தேரின் சிறப்பான வரலாறும்

இலங்காபுரியின் சரித்திரம் படைத்த கிராமத்தில் ஒன்று மானிப்பாய். இம் மண்ணுக்கு இத்தகைய மணம் வீசக் காரணமானவன் மருத நிழலின் கீழ் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஆனைமுகனவன்.


மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் தன்னகத்தே கொண்ட மருத நில சூழ்நிலையில் பல நூற்றுண்டு காலமாக அருள்பாலித்து நம்பிக்கையூட்டும் தும்பிக்கையான் நம் ஐங்கரமூர்த்தி.

19 ஆம் நூற்றுண்டில் அமைத்த சித்திரத்தேரில் விநாயகர் இப்புதுவருடத்தில் 121 ஆம் முறையாக ஆரோகணித்து அருள்பாலிக்க இருக்கிறார். இத்தேர் மருதடியானின் நம்பிக்கையுள்ள அடியவர் ஒருவாரால் நேர்த்திக்கடன் காரணமாக அமைக்கப்பட்டது.

மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கையின் முடிவில் இலகர் வீடு எனப் பலராலும் அழைக்கப்பட்ட வீட்டில் இலகுப்பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். திருமணமாகியும் பிள்ளைப் பேறற்ற அவர் வீட்டுக்கு வடக்கே வயல்வெளிக்கூடாகக் காட்சிதரும் மருதடியானை பக்தி சிரத்தையுடன் வணங்கி வந்தார். மகப்பேறு கிடைத்தால் மகத்தான சித்திரத் தேரும் மண்டபமும் கட்டித் தருவதாக நேர்த்திக்

**பொன்னம்பலம் காங்கேசு**


கடன் வைத்தார். ஆண் குழந்தை ஒன்று அவருக்குப் பிறக்கவே, சந்தோஷ மிகுதியால் உள்ளூர்சிற்பாசாரிகளைக் கொண்டு தேரைக் கட்ட ஆரம்பித்தார். அந்நேரத்தில் அவரை விடம் தீண்டியது, எனினும் அவர் உயிர் தப்பினார். தேர்த்திருப்பணி துரி



தப்படுத்தப்பட்டது.

தேர் சோதிவேம்படி காளி கோவிலுக்கு அண்மையில் வைத்து நிர்மாணிக்கப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

## விநாயகப் பெருமானின் திருவடிகளை இறுகப்பிடித்து உய்வு பெறுவோம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமான் தேவஸ்தானம், புராதன கீர்த்தியும், புகழும் பெற்ற தலமாகும். இங்கு தல விருக்ஷமாக மருது அமைந்திருப்பது மற்று விநாயகர் ஆலயங்களுக்கில்லாத உயர் சிறப்பு. முன்னொரு காலத்தே கிழக்கு நோக்கி இருந்த மூல விக்கிரகமூர்த்தி பக்தர்களின் வேண்டுகோட்கிணங்கி மேற்கு நோக்கித் திரும்பியருளியதாக வரலாறுமுண்டு. தனக்கு மேலான தலைவன் இல்லாதகாரணத்தால் விநாயகரானார். இங்கு ரதோற்சவ தினந்தன்று எழுந்தருளும் மூர்த்தியாக பஞ்சமுக விநாயகப் பெரு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தேரேறி வரும் மருதடி விநாயகனைத் தரிசித்து நலம் பெறுவோம்

**சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படர்ந்ததோர் படரொளிப் பரப்பாக விளங்குபவன் இறைவன். ஆன்மாக்கள் தன்னை வழிபட்டு உய்தியடைய வேண்டுமென்ற பெருங்கருணையினால் திருக்கோயில்களைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளுகிறான்,

''ஆலயந்தானும் அரனெனத்தொழுமே'' என்ற வாக்கு எவ்வளவோ புனிதமும் அற்புதமும் வாய்ந்தது. அடியார்கள் அனைவரும் அன்றுதொட்டு இன்றுவரை ஆலய வழிபாட்டினாலேயே அமைதியும் ஆனந்தமும் அடைந்தனர். இவ்வகைப் பேரின்ப நிலையை வருஷப் பிறப்பிலன்று எமது மக்கள் எதிர்நோக்குவது இயல்பு. மானிப்பாய் மருதடி விநாயகன் வருஷப்பிறப்பிலன்று தேரேறிவரும் கொழு. கண்கொள்ளாத ஒரு காட்சி ஆகும். ஆண்டுக்கொருமுறை இக்காட்சியைப் பெற ஓடோடி வருவார்கள் பக்தர்கள்.

புது வருடப் பிறப்பை முன்னிட்டு மருதடி விநாயகனைத் தேரிலே வைத்துத் தரிசித்து நலம்பெறுவோமாக.


மருதடி விநாயகரின்
அருள் வேண்டிடுவோம்.

- மின்சாரப் பொருள்கள்
- எஸ்- லோன் பைப் வகைகள்
- பெயின்ட்

மற்றும்

- இரும்புப் பொருள்களுக்கும்

நாடுங்கள்!

★ அபிராமி ★

திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.



சித்திரைப் புத்தாண்டில்
சித்தி விநாயகரைப் போற்றிடுவோம்.

ஆதரவாளர்களுக்கு எமது
நல் வாழ்த்துக்கள்!

★ ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ் ★
அன் பான்சி குட்ஸ்

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.
யாழ்ப்பாணம்.



மருதடி விநாயகரின்
பாதமலரடி பணிகின்றோம்!

1. அன்டன் உற்பத்திப் பொருள்கள்
2. C I. C. பெயின்ற்
3. நிலத்திற்குப் பதிக்கும் தெராசோ மூலப் பொருள்கள்
4. கட்டட நிர்மாணப் பொருள்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

சிற்றிசன்
(CITYSUN)
138, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்



ஞான விநாயகா! நலமருள்வாய்!

அன்பர்கள் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள்!

ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.



எமது ஸ்தாபனத்தின் 39ஆவது ஆண்டு நிறைவையொட்டி
மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்த்திருவிழாவாகிய நன்னாளில் எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்களை
அடியார்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம்மிடம் ★ மின்சார உபகரணங்கள் ★ C. B. E. பல்ப்ஸ்
★ N. E. I. மின்மோட்டர்கள் ★ எவரெடி பற்றறி
★ எஸ்லோன் பைப்புகள் ஆகியன சகாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
141, 143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா சிறப்பு மலர் ★

இரதபவனி வரும் விநாயகனின்
தாள் பணிந்திடுவோம்.

✱ ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் ✱

மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
(MANIAM'S TEXTILES)
16, மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

விக்கினங்கள் நீங்கிட
விநாயகனை வேண்டிடுவோம்

எஸ் - லோன்,
பி.வி.சி. பொருட்கள்
விற்பனையாளர் :
ரெமினஸ்
இல. 2, நியூ ரோட், கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

கல்வி அறிவைப் பெருகிடவைப்பாய்
மருதடி விநாயகா!

வடமாகாணத்தில் திறமை மிக்க தனித்துவமான
Super Grade ஆசிரிய குழுவினால் சகல
வகுப்புகளுக்கு நீண்டகால கல்விச் சேவையினை
வழங்கும் ஒரே நிறுவனம்
BITSMAN'S INSTITUTES
Manipay.

மானிப்பாய் விநாயகா!
கருணைமழை பொழிந்திடுவாய்!

சகல கட்டட நிர்மாணப் பொருள்
களுக்கும் தொடர்பு கொள்ள
வேண்டிய இடம்
மஸ்கன்ஸ் லிமிட்டெட்
35, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அருள்மிகு மருதடி விநாயகனின்
அருள் வேண்டி வருவோர்க்கு!
ஓர் குளிரான நற்செய்தி!!

- மல்லிகா ஐஸ்கிறீம்
- மல்லிகா ஐஸ்கிறீம் சர்பத்!
- மல்லிகா நெல்லி ரசம்!
- மல்லிகா ஒரேஞ் ஜூஸ்!
- மல்லிகா பயினப்பிள் ஜூஸ்!

மற்றும் ஐஸ்பழ வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில்
சொகுசாக அமர்ந்து பருகிட, தரம் நாடுவோர்
தவறாது நாட வேண்டிய இடம்
மல்லிகா கூல்(B)பார்
இல. 1, மத்திய சந்தை, மானிப்பாய்.
அனைவரும் வருக! குளிர்பானம் பருக!!

## மருதடி விநாயகர் ஆலய
## தர்மகர்த்தா சபையின் நன்றி

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் 1982 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி பொதுச் சொத்தாக யாழ் மாவட்ட நீதிமன்றத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆகவே இக்கோயிலானது அன்று தொடக்கம் இங்கு மெய்யன்போடு வழிபடும் அனைவரதும் சொத்தாகும்.

இக்கோவில் யாழ் மாவட்ட நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு அமைய 'மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தின் ஆதரவோடு அச் சபையால் ஐந்து வருடத்துக்கொரு முறை வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபரின் தலைமையில் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்படும் ஏழு தர்மகர்த்தாக்களைக் கொண்ட சபையின் நிர்வாகத்தில் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தின் ஏழு ஆண்டுகால வளர்ச்சியை நடைபெற்றுக் கொண்டிருக்கும் மகோற்சவம் வெள்ளிடைமலையாகக் காட்டிக்கொண்டிருக்கிறது.

சுத்தம், விதிமுறை தவறாமை, ஒழுங்கு, கட்டுப்பாடு, நேரம் தவறாமை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு உரமாக நிற்கின்றது.


பொதுச் சொத்தான பின்னர் அடியார்களின் ஒத்துழைப்பால் இவ்வாலயத்தில் பல்லாயிரம் ரூபா பெறுமதியான அழகான பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டதும் மின் இயக்க இயந்திரம் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க திருப்பணி வேலைகளாகும்.

2 - 2 - 87 இல் பிரதிஷ்டை செய்யப்பெற்ற ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் நாளை மூன்றாவது முறையாக தேரில் பவனிவர இருக்கின்றார். அடியார்கள் அனைவரும் இவ் அரும்பெரும் காட்சியைக் கண்டு களித்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இம் மலருக்கும் கட்டுரைகளைத் தந்து சிறப்பித்த பெரியார்களுக்கும் மலரை வெளியிட உதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும் தர்மகர்த்தா சபையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

எம்கடன் பணி செய்து கிடப்பதே

ச. சிவகுருநாதர்
தலைவர், தர்மகர்த்தா சபை



விநாயகர் வீதி உலா வரும் காட்சி

## ஞாலம் போற்றும் ஞானக் கொழுந்து

ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். தீர்த்தத் திருவிழாவுக்கு முதல் நாள் நடைபெறும் தேர்த்திருவிழா தனிச்சிறப்பு வாய்ந்தது. நாளை மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமான் அழகிய சித்திரத் தேரிலே, அடியார்கள் சூழ பவனி வரும் காட்சி கண்களையும் கருத்தையும் கவரும் தன்மை வாய்ந்தது. சமய தத்துவத்தை விளக்கும் வகையில், நுட்பமான சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து விளங்கும் தேர், ஆடி, அசைந்து செல்லும் ஓர் 'ஆலயம் போன்றது.

ஆலயத்தின் திரு வீதியிலே அடியார்கள் எல்லோரும் தம்மிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளை மறந்து, வடம் பிடித்து இழுத்து, பக்தர்களாகப் பணிவாகவும், ஒற்றுமையாகவும் செயற்பட தேர்த் திருவிழா ஏற்ற ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது. புது வருடம் பிறந்ததும் பக்தர்கள் விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமானை வழிபட்டு, தமக்கு ஏற்படுகின்ற இடர் நீங்க மருதடி விநாயகர் ஆலயம் சென்று வழிபடுவது மரபு.

எந்தச் சுப கருமத்தைத் தொடங்கும் பொழுதும் முதலில் வணங்கப்பட வேண்டியவர் பிள்ளையாரே! எனவே ஞானசம்பந்தரும் தான் பாடியருளிய திருமுறைப் பாடலில் 'வழிபடுமவர் இடர்கடி கணபதி' எனக் குறிப்பிட்டுள்ளார். விநாயகக் கடவுளை வழிபடாது முப்புரங்களை எரிக்கச் சென்ற சிவபெருமானுடைய தேர் அச்சு உடைந்த சம்பவத்தை,

''முப்புர மெரிசெய்த
அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த
அதிதீரா'

எனத் திருப்புகழிலே அருணகிரிநாதர் பாடியுள்ளார். பிரமதேவரும் முதலிலே விநாயக வழிபாடு செய்யாது படைக்கத் தொடங்கிய பொழுது சகல ஜீவராசிகளும் விகாரமடைந்து காணப்பட்டன. பின்னர் தனது தவறை உணர்ந்த பிரமா விநாயகரை வழிபட்டு முறையாகத்தனது தொழிலைச் செய்தார் என்பதிலிருந்து விநாயக பூசையின் முதன்மை பற்றி அறிய முடிகிறது.

தேர்த்திருவிழா நடைபெறும் இப் புனித நாளிலே விநாயகப் பெருமானை நேயம் மலிந்த நெஞ்சத்தால் நினைத்து, வாயார வாழ்த்தி, இருகரம் கூப்பி, சிரம் தாழ்த்தி, வணங்கி, இன்னல் நீங்கி இன்பம் பெறுவோமாக. ★

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

### விநாயகப். ..

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மான் திருக்காட்சியளிப்பது பல தத்துவார்த்தங்களை உள்ளடக்கி நிற்கும் பஞ்ச கிருத்தியங்களுக்கு ஆதி கர்த்தா சிவபரம் பொருளேயானலும் அவருக்கு நிகரான பிரணவ சொரூபன் விநாயகரே என்பதனை நாம் உணர்ந்து கொள்ள அந்த ஐந்து திருமுகங்கள் எம் மனதில் நீங்கா நிலைபெறுகின்றன. எல்லாப் பூஜைகளிலும் முதலிடம் பெறுவது விக்கினேஸ்வரர் வழிபாடு. எனவே அவரின் அருள்மிகு பெருமையை சிறியேம் எவ்வாறு விளக்குவது. மன ஒருமையோடு அப்பெருமானின் திருவடித்தாமரைகளை இறுக்கப்பிடித்து உய்வு பெறுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி!! ★

சித்திரத் தேரிலே பவனி வரும்
சித்தி விநாயகா!
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கரசன் எலக்றிக்கல்ஸ்
(KARASAN ELECTRICALS)
மின்னிணைப்பு ஒப்பந்தக்காரரும் விநியோகஸ்தரும்
4, ஸ்ரான்லி வீதி,
ஜே. எம். சி பில்டிங்,
(லிடோ சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

புத்தாண்டில் ரதபவனி வரும்
மருதடி விநாயகரின் அருள் வேண்டுகின்றோம்

1. விஸ்கன்ஸ் மில்:
V. S. K. No. 1 அரிசி உற்பத்தியாளர்
2. VISKAM TRADES:
ஹார்ட்வயர்ஸ் மற்றும் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்
3. V. S. கணபதிப்பிள்ளை & Bro.
பிடைவை மற்றும் திருமண வைபவ பொருள்கள் விற்பனையாளர்

உரிமையாளர்:
V. S. கணபதிப்பிள்ளை
மானிப்பாய்.
போன்: 519

மருதடி விநாயகன்
பாதாரவிந்தமதைப் பணிந்திடுவோம்.

அன்பர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!
தேவாஸ்
பண்டத்தரிப்பு

மருதடி விநாயகனை வாயாரப் பாடி
மனமார வாழ்த்திடுவோம்
அன்பர்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஈஸ்வரன்
இரும்புத் தொழிற்சாலை
இந்துக் கல்லூரி முன்பாக,
மானிப்பாய்.

மருதடி விநாயகா! ரதமேறி வந்து
அருள் புரிவாய்!

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
V. S. M. ஸ்ரோர்ஸ்
ஆலடிச் சந்தி, மானிப்பாய்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு அடியார்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!



★ இறக்குமதி செய்யப்பட்ட மின்சார உபகரணங்கள்
★ எஸ்-லோன் பைப்புகள் மற்றும் உபகரணங்கள்
★ மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்
ஆகியன சகாய விலையில் பெற்றுக்கொள்ள
"சுந்தர்ஸன்"
மத்திய சந்தை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 ஓவர் கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 13

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் பெனின்சுலா குறுப்பின் ஆதரவுடன் நடத்தும் மட்டுப்படுத்தப்பட் 30 ஓவர்கள் கொண்ட நொக் அவுட் முறையிலான கிரிக்கெட் போட்டிகள் இன்று வியாழக்கிழமை சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இப்போட்டிகளில் 'ஏ' பிரிவில் ஜொனியன்ஸ் (ஏ) விளையாட்டுக் கழகம், ஷப்ரு விளையாட்டுக் கழகம், ஸ்டான்லி விளையாட்டுக்கழகம், ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகம், சென்றலைட் [சொக்]விளையாட்டுக் கழகம், கிருஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்களும் —

''பீ'' பிரிவில் கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம், மல்லாகம் றெட் ஸ்டார் விளையாட்டுக்கழகம், சென்றலைட் [நீல] விளையாட்டுக் கழகம், ஜொனியன்ஸ் (பீ விளையாட்டுக்கழகம், ஓல்ட் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம், நொதேர்ண் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்களும் பங்குபற்றுகின்றன.

இப் போட்டிகள் காலையில் 8. 30 மணிக்கும் மாலையில் 1. 00 மணிக்கும் ஆரம்பமாகும்.

இன்று காலையில் (13/04/89) நடைபெறும் போட்டியில் ஷப்ரு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்றலைட் (சொக்) அணியும் —

மாலையில் நடைபெறும் ஆட்டத்தில் மல்லாகம் றெட் ஸ்டார் அணியை எதிர்த்து சென்றலைட் [நீல] அணியும்— மோதும்.

நாளை காலை [14/04/89] நடைபெறவுள்ள போட்டியில் ஸ்டான்லி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகமும்—

மாலையில் நடைபெறும் போட்டியில் ஜொனியன்ஸ் (பீ) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து—ஓல்ட்பற்றீசியன் விளையாட்டுக் கழகமும் மோதும்.

15-ஆம் திகதி காலையில் நடைபெறவுள்ள கால்இறுதிப் போட்டியில் இன்று காலையில் (13/04/89) நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் (ஏ) விளையாட் கழகமும் —

மாலையில் நடைபெறும் கால்இறுதிப் போட்டியில் (இன்று மாலையில் 13/04/89) நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியை எதிர்த்து கொக்குவில் சன சமூக நிலைய அணியும் மோத உள்ளன.

20-ஆம் திகதி காலையில் நடைபெறவுள்ள கால்இறுதிப் போட்டியில் 14-ஆம் திகதிகாலையில் நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் அணியை எதிர்த்து கிருஸ் கொப்பர்ஸ் அணியும் — 22 ஆம் திகதி காலையில் நடைபெறும் கால் இறுதிப்போட்டியில் 14 ஆம் திகதி மாலையில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியை எதிர்த்து நொதேர்ண் விளையாட்டுக் கழகமும் மோதும்.

(இ- 6)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப் 13

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் சனசமூக நிலையத்தினதும் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தினதும் 37 ஆவது ஆண்டுவிழா நாளை 14-ஆம் திகதி முதல் 17-ஆம் திகதி வரை நடைபெறும்.

நிலைய விளையாட்டு அரங்கில் நாளை பிற்பகல் 2 மணிக்கு ஷெவிழா ஆரம்பமாகும். (ஒ)

## மருதடி....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது. தேர் தாவடி., வட்டுக்கோட்டை மானிப்பாயைச் சேர்ந்த சிற்ப வல்லுநர்களாகிய பொடியராலும் அவரின் புத்திரர்களாகிய நல்லதம்பி, தாமு, நாகமணி என்போராலும் நிர்மாணிக்கப்பட்டது. தேருக்கு இலகர் வளவு முதிய இலுப்பை மரங்களும், சோதிவேம்படிச் சூழலிலுள்ள இலுப்பை மரங்களும் பாவிக்கபப்பட்டன. இற்றைவரை கோப்புக் குலையாமல் அடியார்களைப் பரவசப்படுத்தி வருகிறது இச்சித்திரத்தேர். திரு. இலகுப்பிள்ளை தேரை நிர்மாணித்ததும் இத்தேரை ஒவ்வொரு புத்தாண்டிலும் தேர்த்திருவிழாவாகப் பிரகடனப்படுத்திக் கொண்டாடினர். அவர் சிவபதமடைந்த பின் அவரின் வழித்தோன்றல்களால் தேர்த்திருவிழா மிகவும் சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது.

இறைபக்தி மக்களிடையே பெருகுவதற்கு புதுக்கோவில் அமைத்தலும் புனருத்தாரணம் செய்வதும் வழிவகுப்பன. இவற்றிற்கெல்லாம் மூல காரணமானவர் நம்நாட்டு சிற்ப சாஸ்திரவல்லுநர்கள். கடவுள் உருவங்களைச் சிறப்பாக அமைப்பவர்கள் இவர்கள். மருதடியானின் சித்திரத் தேரை அண்மிப்பார்த்தால் சிற்பாசாரியரின் கைத்திறன் நன்கு விளங்கும். இந்தியாவிலுள்ள திருவிடை மருதூர் சுப்பிரமணிய ஸ்தபதி கூட இத்தேரை நோக்கி வியந்தார், இற்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களும் இத்தேரின் அமைப்புப் பற்றி வியந்தார். அப்பொழுது அவர் நிர்மாணித்தவர் பெயரைத் தேரில் பொறிக்காமல் விட்டதற்கு கவலை தெரிவித்தார். எண்ணிலடங்காத உருவங்களையும் சித்திரத் தேரினையும் அமைத்த திரு. தம்பித்துரை அவர்களே வியந்து [illegible] டும்படி அமைந்த தொன்மை

---

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**செல்வன் கார்த்திகேசு ஜீவானந்தன்**

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27-09-1970 | 16-03-1989 |

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மறைந்த எனது அருமைக் குமரன் ஜீவானந்தனின் பிரிவு குறித்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிப் பற்பல வகையில் உதவிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறும் கடப்பாடுடையோம்.

அவரது அந்தியேட்டிக் கிரியைகள் 16. 04. 1989 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குக் கீரிமலையிலும், அன்று சபிண்டீகரணம் காலை 9.30 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அன்பர்களை இதில் கலந்து அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்க அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

கா. சிவயோகபாக்கியம்.

'சிவகிரி',
இளவாலை.

(10538)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**இரத்தினம் இராசேந்திரம்**

| பெற்றெடுத்தோம்: | பறிகொடுத்தோம்: |
|---|---|
| 09- 07- 1936 | 15- 03- 1989 |

செய்தி கேட்டோம்; செயல் இழந்து நின்றோம் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய அன்பின் தெய்வமே! நீ சென்ற இடம் ஏதோ சிதைந்து போன உன் வாழ்வை சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
மனைவி, மாமன், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

---

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த

**புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்**
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## என். சற்குணராஜா & பிறதர்ஸ்

பிரம்படி லேன்,
கொக்குவில்

Golden Comet பிறவுண் பேடு, சேவற்குஞ்சுகள், Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, Silver White பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன், வியாழன் முதலிய நாட்களில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

[109]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



**உயர்திரு க. தாமோதரம்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 26- 06- 1908 | 15- 03 1989 |

ஆலமரமாய் நின்று அனைவருக்கும் நிழல் தந்தாய்
பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தாய்
காரிருளில் ஒளிதந்தாய் கடமை முடித்தாய்
காலமெலாம் உன்நினைவு காத்திருப்போம்
போற்றிடுவோம் இறைவனடி சேர்ந்திருப்பீர்!

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர், அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் 13- 04- 1989 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியங்களிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், உறவினர்கள்.

இலக்கும் இல்லம்
[illegible],
அச்சுவேலி.

(10544)

---

## கப்பலில் வேலை வாய்ப்புக்கள்

நான்கு கிரேக்க கப்பல்களில்
உடனடி வேலை வாய்ப்புக்கள்

| | |
|---|---|
| 2nd Officers | Bosan |
| 3rd Engineer | Oiler |
| Radio Officers | AB |

மேற்காணும் பதவிகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

● இத்தாலி ● பிரான்ஸ்
● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

**நாஷனல் சிப்பிங் அன்ட் ரவல்ஸ்**

நியூ லலிதா பில்டிங்,
185/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2258]

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சுப்பிரமணியம் நாகம்மா**

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 23 - 09 - 1920 | 27 - 04 - 1985 |

திதி: 13. 04. 1989

நம் குடும்பத்தை வழி நடத்திய குலவிளக்கே! நான்காண்டு நினைவாக எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

[சி/2100]

---

## 6 ஆம் மாத கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:
13- 03- 1967

அழிப்பு:
15- 10- 1988

**செல்வன் கந்தசாமி றதிதரன்**

பாசத்தின் திருவிளக்காய்த் திகழ்ந்த றதியே!
நீ மறைந்த மாதங்கள் ஆறும் ஒர்கணம் போல்
மறைந்து விட்டதே றதியே!
நீ எம்மோடு வாழ்ந்த நாட்கள் என்றும்
எம் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றது ஐயா!
மாதங்கள் மாறிப் பல வருடங்கள் ஆனாலும்
உன் உருவம் எம்மைவிட்டு என்றும் மறையாது றதியே!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் 13- 4- 89 வியாழன் அன்று இல்லத்தில் நடைபெறும்.

உன் பிரிவால் என்றும் அல்லலுறும்:

அப்பா, அம்மா, அண்ணுமார், அக்காமார்,
தம்பிமார், தங்கையர், அம்மம்மா, அன்ரிமார்,
சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார்,
அத்தைமார்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(10526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்ததாம் பேதமை இல்.

**பொருள்:**

சொந்த அறிவின் ஆலோசனையுடன் மனோதிடமும் உள்ள ஆண்மக்களுக்கு மனைவியின் பேச்சைக் கேட்டுத் தான் எதையும் செய்வது என்ற மூடத்தனம் இருக்காது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
13 - 04 - 1989 த. பெ. இல: 23

# தமிழருக்கு உதவிடுவீர்!

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம் நடமாடும் வைத்திய நிலையம்— சுகாதார நிலையம்— ஒன்றை விரைவில் ஆரம்பிக்க உள்ளதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களின் சுகாதார நலனைப் பேணி அவர்களை நோய் நொடிகளிலிருந்து காப்பாற்றுவதும், கொடிய நோய்கள் அணுகாமல் தடுப்பதுமே நடமாடும் வைத்திய நிலையத்தை உருவாக்குவதன் முக்கிய நோக்கமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அடுத்துத் தொடுத்து நடந்த இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, மிகவும் கேவலமாகப் பாதிப்புற்ற கிராமங்களை செஞ்சிலுவைச் சங்கத் தலைமை அலுவலகப் பிரதிநிதி ஒருவர் வந்து பார்த்தார். பாதிக்கப்பட்ட கிராமங்களில் வாழும் மக்களின் சுகாதார நிலையை நேரில் கண்டறிந்தார்,

அவர் பிரஸ்தாப மக்களின் சுகாதார நிலை ஏற்கனவே பாதிக்கப்பட்டிருப்பதை, மேலும் மோசமாகப் பாதிக்கப்பட இருக்கும் ஆபத்தை உணர்ந்தார், அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதையும் உணர்ந்தார். அதன் பெறுபேறே நடமாடும் வைத்திய நிலையம். அது பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று இலவச வைத்திய சேவை புரியவுள்ளது. வைத்திய சேவை மக்களின் காலடியை நாடிச் செல்லும் ஒரு புதுத்தொண்டு குடாநாட்டில் பிறக்கிறது.

முதலில் ஒன்றாக ஆரம்பமாகும் நடமாடும் வைத்திய நிலையம் காலக் கிரமத்தில் பலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது வெறும் எதிர்பார்ப்பாக இல்லாமல் கைகூடவேண்டும் என்பதே எமது விருப்பம்.

சுகாதார சேவையைப் பொறுத்த வரையில், தமிழ்ப் பகுதிகளில் மக்களுக்கு சுமாரான சேவைதானும் கிடைப்பதாயில்லை. அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இலவச வைத்திய சேவை என்பது பெயருக்கு உண்டானாலும், இப்பகுதிகளில் உள்ள அரச ஆஸ்பத்திரிகளில் போதிய வைத்திய வசதிகள் இல்லை.

அதனால் பண வசதி குறைந்த மக்கள்கூட தமது மாத வருமானத்தில் ஒரு பகுதியை வைத்தியச் செலவுக்கு ஒதுக்க வேண்டி உள்ளது, தமிழ்ப்பகுதிகளில் இருக்கும் ஆஸ்பத்திரிகள் சில. அவற்றில் சரிவர இயங்குபவை மிகச் சில. அவ்வாறு இயங்குபவற்றிலும் வைத்திய சேவைக்குரிய சகல வசதிகளும் உடைய ஆஸ்பத்திரிகள் மிகமிகச் சில!

குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களின் கிராமப் பகுதிகளில் அரசின் இலவச வைத்திய சேவை மத்திமம் என்று சொல்வதற்கும் இல்லாத அதம நிலையில் உள்ளது.

ஆகவே செஞ்சிலுவைச்சங்கங்கள் போன்ற சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் தமிழர் பகுதிகளை ஏறெடுத்துப் பார்த்து, அவர்களின் சுகாதார நலனுக்கு உதவ வேண்டும். தாம் உதவுவதோடு மட்டுமன்றி, ஏனைய சர்வதேச நிறுவனங்களுக்கும், ஈழத் தமிழரின் சுகாதார நிலையை, வைத்தியச் சூழ்நிலையை எடுத்துச் சொன்னால் மிகவும் நல்லது.

பலஸ்தீனிய மக்கள், நமீபிய மக்கள், சூடான் மக்கள் போன்று ஓர் போர் நிலைச் சூழலில், இராணுவச் சூழலிலேயே ஈழத் தமிழர்களும் வாழ்கிறார்கள். ஆகையால் அவர்களைச் சாதாரண மக்களாகக் கருத முடியாது. பாதிப்புற்ற மக்களாகக் கருதி உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

### ஆன்மாவை அடக்கி

# அல்லாஹ்வின் அருள் பெற ஒரே வழி நோன்பு ஆகும்

மனிதனது ஆன்மாவை அடக்கியும், ஆசைகளைகுறைத்தும் இறைவனைத் தூய்மையான எண்ணத்தோடு தியானிப்பதற்கு ஒரே வழி புனித ரமழானின் நோன்பாகும்.

கோட்டை ஜும் ஆப்பள்ளி வாசலில் ஜும்ஆத் தொழுகையின் பின் நடைபெற்ற ரமழான் விசேட நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் மௌலவி கே.பி.நஸார்தீன் மேற்கண்டவாறு கூறினார்.

மௌலவி பௌசூன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மௌலவி நஸார்தீன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

மனிதர்களுக்கு இறைவனை தியானிப்பதற்கு இறைவன் வழங்கிய ஒரு மாபெரும் அருள் புனித ரமழான் மாதம் ஆகும்.

இம் மாதத்தில் மனிதன் அவனது நல்ல செயல்கள் மூலம் இறைவனை மிக நெருங்குகின்றான்.

ஆன்மீக ரீதியாக இறைவனை நெருங்கும் மனிதன் இறைவனின் திருப்திக்குள்ளாகின்றான். எனவே புனித ரமழானை சிறப்புற நோன்புகளை நோற்று சிறப்பிப்பவர்கள் மறுமையில் அவனது சுவர்க்கத்தில் வீற்றிருப்பர். இப்பலன்களை நாமும் அடைந்து கொள்வோமாக.

இப்படி அவர் கூறினார்.

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல்

# வருகிற ஜூன் மாதம் இடம்பெறும்?

## ஜனதா தளம் கட்சிக்கு அங்கீகாரம்

புதுடில்லி, ஏப்ரல் 12

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் வருகிற ஜூன் மாதத்தில் நடத்தப்படலாம் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள் வருகிற டிசம்பருடன் முடிவடைகிறது.

திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த பிரதமர் முடிவு செய்திருப்பதாகவும் அதற்கு முன்னர் பஞ்சாப் பிரச்சினைக்கு எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து சமரச முடிவு ஒன்றைக் காண முயற்சிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

நாடாளுமன்றச் சபாநாயகர் பலராம் ஜாக்கர், ஜனதா தளம் கட்சிக்கு அங்கீகாரம் வழங்கி இருக்கிறார்,

முன்னாள் நிதி அமைச்சரான திரு. வி. பி, சிங் தலைமையிலான ஜனதா தளம் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்தில் 16 எம். பிக்கள் உள்ளனர்,

ஜனதா தளம் கட்சி நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பது, பிரதமரின் இந்திரா காங்கிரஸுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் ஒரு சவாலாக அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இதனிடையில் பிரபல கம்யூனிஸ்ட் தலைவர் எஸ். ஏ. டாஸ்கே தலைமையிலான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வருகிற பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸை ஆதரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. (எ)

## வெளியுறவுக் கொள்கை பற்றி அதிபர் புஷ்ஷுக்கு ஆலோசனை

வெளிநாட்டுக் கொள்கையில் பெரிய மாற்றம் செய்ய வேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் கோரப்பட்டிருக்கிறார்,

குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் மற்றும் சோவியத் யூனியன் சம்பந்தமான கொள்கைகளில் பெரிய மாற்றங்களைச் செய்யாமல் நிதான போக்கைக் கடைப்பிடிக்கும் படியும் திரு. புஷ்ஷுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று அறிக்கைகளில் இவ்வாலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. [எ]

### ஜெயலலிதாவின் இராஜினாமா விவகாரம்:-

# இமாலயத் தவறை மறைக்க கலைஞர் பொய் சொல்கிறார்

## சிதம்பரம் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்ரல் 12

ஜெயலலிதாவின் இராஜினாமாக் கடித விவகாரத்தில் முதலமைச்சர் கருணாநிதி இமாலயத் தவறு செய்துவிட்டார். இப்போது அதை மூடிமறைக்க இமாலயப் பொய் சொல்கிறார்.

மத்திய இணை அமைச்சர் திரு. ப.சிதம்பரம் தியாகராய நகரில் நடந்த கண்டனக் கூட்டத்தில் பேசுகையில் முன் கண்டவாறு சொன்னார்.

இக்கூட்டத்தை அ.தி.மு.கவும் இந்திரா காங்கிரஸும் கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன.

திரு. சிதம்பரம் மேலும் சொன்னதாவது;

எம். ஜி. ஆர். இறந்த பின்னர் ஜனவரி 28, 1988 இல் தமிழ்நாடு சட்டசபையில் இடம்பெற்ற வன்செயல் ''கறுப்புப் புள்ளி'' என்று சொன்னால் கடந்த மாதம் 25 இல் சட்டசபையில் இடம்பெற்ற வன்செயல் சட்டசபை மீதான 'கறுப்புத்திரை' (Iron curtain) ஆகும்

தி. மு. க. ஒரு பாஸிச இயக்கம்; வன்செயலில் நம்பிக்கை கொண்ட இயக்கம் அது.

தி. மு. க. பதவிக்கு வரக் கூடாது என்று நாம் விரும்பினோம். துரதிஷ்டவசமாக அது பதவிக்கு வந்துவிட்டது.

இப்படி திரு சிதம்பரம் சொன்னார்.

காங்கிரஸ் தலைவர் திரு மூப்பனார் பேசுகையில். ''தமிழ்நாடு சட்டசபை சம்பவம் வேலியே பயிரைமேய்ந்த கதையாகிவிட்டது'' என்று சொன்னார். (உ-எ)

● சோவியத் யூனியன்

# ஜோர்ஜியா மாநிலத்தில் ஊரடங்குச் சட்டம்!

சோவியத் யூனியனின் பல மாநிலங்களில் தன்னாட்சி கோரும் இயக்கங்களின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகிறது

கடைசியாக ஜோர்ஜியா மாநிலத்தில் இனக்கலவரம் வெடித்திருக்கிறது.

கூடுதல் சுயாட்சி அதிகாரங்கள் கோரும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது 16 பேர் உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மாஸ்கோ அரசு அங்கு தீவிரப்படுத்தி உள்ளது.

மாநிலத்தில் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பு இராணுவத்திடம் மாஸ்கோ அரசு ஒப்படைத்துள்ளது.

மாநிலத்தில் வன்முறையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருமுகமாக ஊரடங்குச் சட்டமும் அமுல் நடத்தப்படுகிறது. [எ]

### தமிழ்நாடு சட்டசபை

# தினமும் வெளிநடப்பு; அ தி.மு.க. கைவிட்டது!

சென்னை, ஏப்ரல் 12

சட்டசபையில் தினமும் வெளிநடப்புச் செய்வதை அ.தி.மு.க. எம் எல் ஏக்கள் கைவிடுவர்,

அ. தி. மு. க. எம் எல் ஏயும் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான திரு. எஸ். திருநாவுக்கரசு இதனை செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சட்டசபையில் கேள்வி நேரம் முடிந்த பின்னர் அனைவரின் கண்களும் திரு. திருநாவுக்கரசை நோக்கின. நேரம் போய்க் கொண்டு இருந்தது.

நம்பமுடியாத நிலையில் முதலமைச்சர் மு. கருணாநிதி மத்தியில் உள்ள மேசையில் ஊன்றியபடி, திரு. திருநாவுக்கரசுவை நோக்கி 'வழமையான வெளிநடப்பு இன்று இல்லையா?— என்று கேட்டார்.

கல்வி அமைச்சர் அன்பழகனும் தனது அமைச்சின் மீதான விவாதத்தைத் தொடக்குவதற்கு முன்னதாக எதையோ எதிர்ப்பார்ப்பதைப் போன்று திரு. திருநாவுக்கரசுவைப் பார்த்தார்.

எதிர்பார்த்த வெளிநடப்பு இடம்பெறவில்லை.

பின்னர் செய்தியாளர்களிடம் திரு. திருநாவுக்கரசு பேசினார்.

பத்து நாட்களாக நடந்த ஆட்சேப வெளிநடப்பைக் கைவிடுவது என்று கட்சி தீர்மானித்துள்ளது.

ஆனால் வெளியில் ஆட்சேப இயக்கம் தொடரும்— என்று சொன்னார். (எ)

# ஆப்கன் கெரில்லாக்களுடன் அமெரிக்காநேரடித்தொடர்பு

வாஷிங்டன், ஏப்ரல் 12

ஆப்கன் கெரில்லாக்களுடன் நேரடித்தொடர்பு வைக்க அமெரிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இதற்கு முதற்கட்டமாக ஆப்கன் கெரில்லா அமைப்புகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த தூதர் அந்தஸ்தில் திரு. பீட்டர் தொம்ஸென் என்பவரை அமெரிக்க இராஜாங்க அமைச்சு நியமித்திருக்கிறது. கெரில்லாக்கள் மீதான பாகிஸ்தான் கட்டுப்பாட்டை அகற்றும் ஒரு நடவடிக்கையாகவே அமெரிக்காவின் இந்த நியமனம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# ஞான வைரவர் பிரதிஷ்டை

# சிவநெறிச் சீலரின் நிரந்தர வைப்பு

## 'சிவனருட் செல்வன்' பட்டமளிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஞானவைரவர், சிவநெறி சீலர்களின் ஓர் நிரந்தர வைப்பாகும். தமிழரைத் தலை நிமிர வைத்துள்ள இக்கல்லூரியில் எழுந்தருளியுள்ள வைரவர் ஒரு ஞானத் தெய்வம் மட்டுமல்ல காவல் தெய்வமும் கல்வித் தெய்வமும் கூட. அமரர் பி எஸ். குமாரசுவாமியின் ஆசையைப் பூர்த்தி செய்ய முன்நின்று உழைத்த புலவர்சோமசுந்தரமும் அவருக்கு உறுதுணையாக உதவிய பழைய மாணவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களின் திருப்பணியினால் எம்மைச் சூழ்ந்திருந்த இருளும் பீடைகளும் நீங்கி ஞான ஒளி வீசத் தொடங்கியுள்ளது.

மட்டக்களப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்சங்கத்தின் சிவஞானத்தமிழ் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சிகளில் ஒன்றாக அக்கல்லூரியின் தமிழ் பேராசான் புலவர் சி. செ. சோமசுந்தரத்தின் சைவப் பணியைப் பாராட்டி பட்டம் அளிக்கப்பட்டது.

பட்டமளிப்பு வைபவத்தில் திரு. சோமசுந்தரம் மேலும் கூறியதாவது;

புலவர் சோமசுந்தரத்தின் முன்னோர்கள் பெரிய புண்ணியவான்கள். அவர்களின் வழியில் வந்த இவர் இட்டுள்ள வைப்பு எம் எல்லோரையும் ஈடேற்றும் ஓர் நிரந்தர வைப்பாகும்.

இவரின் வற்றாத வைப்பின் மூலம் நாம் ஒவ்வொருவரும் இறைவனைத் தரிசிக்கவும் அவன் அருள் பெறவும் வகுத்துள்ளார்.

இப்படி அவர் கூறினார்.

விழாத் தலைவர் திரு. செந்தில்நாதன் தனது உரையில் கூறியதாவது;

அண்மைக்காலத்தில் எமக்கு ஏற்பட்ட இன்னல்களால் எம் மத்தியில் வாழ்ந்துவந்த அதிகாரம், பணம், செல்வாக்கு உடைய ஒரு கும்பல் சமப்படுத்தப்பட்டுள்ளது.

எமக்கு மேலான ஒரு சக்தி

8 ஆம் பக்கம் பார்க்க

### யாழ் பல்கலைக்கழகத்தின்

# சித்த மருத்துவ ரணசிகிச்சை பரீட்சை முடிவுகள் விவரம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 15

யாழ். பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவ ரண சிகிச்சை முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது இறுதி மாணிப் பரீட்சை (1988) முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

விவரங்கள் வருமாறு:-

முதலாவது மாணிப் பரீட்சையில் சித்தி பெற்றோர்:

முதலாம் வகுப்பு - செல்வி எஸ். சியாமளா, இரண்டாம் வகுப்பு கீழ் – செல்வி ஏ. மனோரஞ்சிதமலர். சித்தி - செல்விகள் எஸ். கலைமகள், கே. றேணுகா.

இரண்டாவது மாணிப் பரீட்சையில் சித்தி பெற்றோர்;

இரண்டாம் வகுப்பு மேல் - செல்வி பி. பத்மலோஜினி, செல்வி எஸ். வைஜந்தி. இரண்டாம் வகுப்பு கீழ் - எஸ். சிறிசுப்பிரமணியம், பி. சுரேசன், சித்தி - செல்விகள் எஸ். சுமதி, எஸ். சிவமலர், எஸ். திரிபுரநாயகி,

மூன்றாவது மாணிப் பரீட்சையில் சித்தி பெற்றோர்:

இரண்டாம் வகுப்பு மேல் - செல்விகள் கே. நீலவேணி அம்மாள், பி. சைலஜா.

இரண்டாம் வகுப்பு கீழ் - செல்விகள் ஏ. அம்பிகை, என். அருணாதேவி, கே. நாகேஸ்வரி, என். பவளராணி, ஆர். சிவசக்தி, எஸ். சுதாமதி, ரி. இலின்வெரோனு, கே. சற்குணதேவி.

சித்தி - செல்விகள் என். ஜெயலக்சுமி, ரி. நவலக்சுமி, எஸ். பெலிசியா ராஜி, கே. சிவராஜா.

நாலாவது மாணிப் பரீட்சையில் சித்திபெற்றோர்:

இரண்டாம் வகுப்பு மேல்- செல்விகள் பி. கலைச்செல்வி, என். சயாமா, வி. விவியன்.

இரண்டாம் வகுப்பு கீழ்— செல்விகள் பி. மங்களேஸ்வரி, என். திலகேஸ்வரி, பி. வி. விமலதாஸ்.

சித்தி - செல்விகள் எஸ். அருந்தவராணி, ஆர். ஜெயந்தினி, வி. கனகேஸ்வரி, கே. மங்களகுமாரி, ஏ. ராஜராஜேஸ்வரி, பி. சாந்தநாயகி, சி. திலகேஸ்வரி, எஸ். வடிவேலு. எஸ். யோகேந்திரன் ஜ. ஜபனும கணேசன்.

இறுதிப் மாணிப் பரீட்சை சித்தி பெற்றோர்:

முதலாம் வகுப்பு- எஸ். சிவசண்முகராஜா, செல்வி ரி. லலிதா, சித்தி- செல்விகள் ஏ. பிரேமா, எஸ். கலாநாயகி, ரி. விக்னவேணி, (க)

## ஓம் கணபதியே! ஐயா!!

நல்லையில் வாழ்வு சொள்ளும்
நற்கயிலாய பிள்ளாய்!
எல்லையில் கஷ்ட நஷ்டம்
எய்திய தமிழர் நங்கள்
அல்லலை ஒழித்து நித்தம்
ஆனந்த வாழ்வை யிங்கு
ஒல்லையில் அருளுவாயே!
ஓம்கண பதியே! ஐயா!!

—கவியரசு
வெண்பாமணி முருகசூரியன்

(ஒல்லை- விரைவு)

[இன்று நல்லூர்க் கயிலாய பிள்ளையார் 3- ஆம் திருவிழா]

## அண்ணமார் சிவன் பொங்கல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

தெல்லிப்பழை கோவிற்புலம் ''அண்ணமார் சிவன் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை நண்பகல் வருடாந்த பொங்கல் விழா நடைபெறும்.

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு விஷேட அபிஷேகமும் சுவாமியின் வெளிவீதியுலாவும் இடம்பெறும். (ச)

## வருட அபிஷேகம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 13-ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 9. 40 மணிக்கு வருடப் பிறப்பு அபிஷேகமும் 10. 15 மணிக்கு வருடப்பிறப்பு விசேட பூசையும் நடைபெறும்,

14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியும் காலை 6, 30மணிக்குதிருவீதி உலாவும் நடைபெறும். (ச)

★ ★ ★

வண்ணை - ஸ்ரீவிஸ் லிங்கப் பிள்ளையார் (மூத்தவிநாயகர்) கோவிலில் எதிர்வரும் 14ஆம் திகதி புதுவருட தினத்தன்று வருஷப்பிறப்பு உற்சவம் நடைபெறும்.

மாலை 6- மணிக்கு அபிஷேகமும், இரவு 8- மணிக்கு விநாயகர் வீதியுலாவும் இடம் பெறும்.




ரமழான் மாத காலம் வந்துவிட்டதென்றால் சுவர்க்கங்களின் வாசல்கள் அனைத்தும் திறக்கப்பட்டு விடும், நரகங்களின் வாசல்கள் அனைத்தும் பூட்டப்பட்டு விடும, மக்களைக் கெட்டவழியில் வழி நடத்தும் மனிதர்களின் விரோதிகளான ஷைத்தான்களுக்கு கெல்லாம் விலங்கிடப்பட்டு விடும்.

ளஹர் முடிவு 4 - 29
நோன்புதிறக்கும் நேரம் 6 - 20

## விஷேச மாநாடு

யெகோவாவின் சட்சிகளின் விசேஷ மாநாடு ஒன்று 15 ஆம் திகதி சனிக்கிழமை, கிளிநொச்சியில், புனித திரேசான் மகளிர்மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகள்
★ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

13-04-1989 வியாழக்கிழமை

இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை : யாழ்ப்பாணம்.

## காங்கிரஸாரும் வெளிநடப்பு

சென்னை, ஏப்ரல் 13

ஜெயலலிதாவின் ராஜினுமாக் கடிதம் பற்றி தமிழக சபா நாயகர் தமிழ்க் குடிமகன் அளித்த தீர்ப்பை எதிர்த்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று சட்டசபைக் கூட்டத்தில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.

சிறிது நேரத்தில் அவர்கள் மீண்டும் திரும்பி வந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர். [ஒ-எ]

## தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையானோர்
# இரண்டாம் கட்ட நிவாரணம் கோரி
# திருமலையில் பெரும் ஆர்ப்பாட்டம்

— உதயன் திருமலை மாவட்டச் செய்தியாளர்

திருகோணமலை, ஏப்ரல் 13

தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் தங்களின் இரண்டாவது கட்ட நிவாரண உதவிசளை வழங்கக்கோரி கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சுமார் 200 பேர் உதவி அரசாங்க அதிபரின் காரியாலயத்திற்குள் புகுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அலுவலக கண்ணுடி ஜன்னல்கள் உடைந்து சிதறின.

இதனை அடுத்து உதவி அரசாங்க அதிபர் திரு. ரி.சோணுமலையும் ஏனைய உத்தியோகத்தர்களும் அங்கிருந்து வெளியேறினர். அடுத்து ஆர்ப்பாட்டம் நடத்திய இளைஞர்கள் வாசலில் அமர்ந்து சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிது நேரத்தின் பின்பு மாகாண அரசின் அதிகாரிகள் சிலர் அங்கு வந்து ஆர்ப்பாட்டக்காரர்களுடன் உரையாடினர். எனினும் இளைஞர்கள் திருப்தியடையவில்லை. அரசாங்க அதிபர் அங்கு வந்து தங்கள் முன்னிலையில் வாக்குறுதி அளிக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதை அடுத்து அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. எம். செய்யுநதீன், வட – கிழக்கு மாகாண அரசின் புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் ஆகியோர் அமைதிப் படையின் பாதுகாப்புடன் அங்கு வந்து சேர்ந்தனர்.

அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இரு அதிகாரிகளும் சொழுக்கும், வெயிலையும் பொருட்படுத்தாது நின்றுகொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேரமாக பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இளைஞர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது.

அங்கு கடமையிலிருந்த இலங்கைப் பொலீஸார் ஒருவர் இளைஞர் ஒருவரை இழுத்துத் தாக்கினுர். இதையடுத்து இளைஞர்கள் ஆவேசம் கொண்டு எழுந்து கூச்சலிட்டனர். உடனே அமைதிப் படையினர் கூட்டத்தைக் கட்டுப்படுத்தினர்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்பு ஓர் இணக்கம் காணப்பட்டது. எதிர்வரும் 17 ஆம் திகதி ரூபா நாலாயிரம் சகலருக்கும் கொடுப்பதாகவும், உடனடியாக எல்லோருக்கும் ஒரு மாத பங்கீட்டுப் பொருள்கள் வழங்குவதாகவும் புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் வாக்குறுதி அளித்தார்.

இதனை அடுத்து 1.30 மணி அளவில் இளைஞர்கள் அவ்விடமிருந்து அமைதியாகக் கலைந்து சென்றனர் [ஒ-150]

## நேற்று வன்செயல் இல்லையென அரசு அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 13

இலங்கை அரசு அறிவித்த ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் நேற்றுக் காலை 6 மணி முதல் அமுலுக்கு வந்தது.

அதற்குப் பின்னர் நாட்டில் வன்செயல்கள் எதுவும் இடம் பெறவில்லை என்று கொழும்பில் அரசு நேற்று இரவு ஒன்பது மணிக்கு அறிவித்தது.

இதனிடையில் மேலும் 26 தென்பகுதி இளைஞர்கள் நேற்றுச் சரணடைந்தனர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

இதுவரை மொத்தமாக 122 தீவிரவாத சந்தேக நபர்கள் சரணடைந்திருக்கின்றனர் என்று இலங்கை வானொலி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## நாளை தேர்

யாழ்ப்பாணம், ஏப். 13

கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர ஆலயத் தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை 2 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். (அ)

★ ★ ★

நல்லூர், பண்டாரக்குளம் மருதவௗவு பிள்ளையார் கோயிலில் நாளை காலை இரதோற்சவம் நடைபெறும்.

## விஜயவீரவை,..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தலைவர்களை அல்லது அவர்களின் ஒப்பு தலைபெற்றபிரதிநிதிகளை அவர்கள் விரும்பும் எந்த இடத்திலும் சந்திக்கவும் ஜனுதிபதி தயாராக இருக்கிறுர்.

நேற்றைய 'திவயின, [சிங்களப்] பத்திரிகையில் வெளியான மக்கள் விடுதலை முன்னணிச் செயலாளர் உபதிஸ்ஸ கமனுயக்காவினுல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கை அரசு கவனத்திற்கு எடுத்துக்கொண்டுள்ளது.

ஜனுதிபதியின் கிரான்துருக் கோட்டைபேச்சு சம்பந்தமாகவே கமனுயகாவின் அறிக்கை அமைந்திருக்கிறது– உள்நாட்டில் முரண்பாடுகளும் பிரிவுகளும் ஏற்படும் போதுதான் வெளியார் வந்து தலையிடுவர் என்பது சரித்திரம் எமக்குப் புகட்டும் பாடமாகும் — இப்படி அமைச்சர் விஜேரத்தினுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## நியூஸ்வீக் ---

ளார்.

இந்த சஞ்சிகையின் 45 ஆம் பக்கத்தில் இஸ்லாத்தை நிந்திக்கும் சிலஅம்சங்கள் அடங்கி இருப்பதாக முஸ்லிம் விவகார துணை அமைச்சர் ஜாபிர் ஏ. காதர் முறையிட்டிருந்தார்.

## இன்று தொண்டர் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திய அமைதிப்படை அதிகாரிகளும் இவ் வைபவத்தில் கலந்து கொள்வர்.

அழைக்கப்பட்டவர்கள் வைபவம் நடைபெறும் இடத்துக்கு பொதிகள், பைகள் எதனையும் எடுத்துவரக் கூடாதுஎன அறிவுறுத்தப்பட்டுள்ளது. காலை எட்டு மணிக்கே அவர்கள் தமதுஆசனத்தில் இருந்து விடவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

## அறிவித்தல்

புத்தாண்டு தினத்தையொட்டி 15 - 4 - 89 சனிக்கிழமை எமது அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேம்.

★ ஷப்ரு ★

207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

(C-2203)

## காணவில்லை



சந்திரசேகர் (சேகர்)

சந்திரசேகர் (சேகர்) என்னும் பெயருடைய இவரை 8 - 4 - 1989 அன்று தொடக்கம் காணவில்லை. 32 வயதை உடைய பொது நிறமான தோற்றம் கொண்ட இவர், கடைசியாக வெள்ளை நிற சேட்டும் சறமும் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் தயவு செய்து திருநெல்வேலிச் சந்தை பிலோ வளாக வீதி, திருநெல்வேலியிலோ தெரியப்படுத்தவும். (10542)

## மரண அறிவித்தல்

### இராசரெத்தினம் இராசரஞ்சன்

இராசரெத்தினம் இராசரஞ்சன் காலமானுர். இவர் புங்குடுதீவு 11-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 16, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட இராசரெத்தினம் புவனேஸ்வரியின் அன்பு மகன் இராசரஞ்சன் சுவிசில் அகால மரணமானுர்.

இவர் திருமதிஇராசரஞ்சினி நம்பியாரூரன் [ U.K] [கணக்காளர்] இராஜேஸ்வரன் [சுவிஸ்], இராசகுமார் [கனடா], இராஜரமணி [யா/ இந்து மகளிர் கல்லூரி], இராஜபிரதீபன் [யா/ மத்திய கல்லூரி], இராஜசுரேந்திரன் [யா/ வைத்தீஸ்வரா வித்தியாலயம்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தூரன், மயூரன் ஆகியோரின் மாமனுரும் ஆவார்.

அன்னரது ஈமக்கிரியைகள் அம்மன் வீதி இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல்இறுதிக்கிரியைக்காக13-04-1989 வியாழக்கிழமை பி.ப 02-00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றுர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேம்.

16, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அம்பலவாணர் இராசரத்தினம்

[10510]

## ஞான வைரவர்...

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செயற்படுகிறது என்ற உணர்வு முளைவிடத்தொடங்கியுள்ளது.

கடவுளை நம்பினேர் கைவிடப்படார் என்பதற்கமைய எமக்கெல்லாம் உயிர்ப்பிச்சை தந்த இக்கல்லூரியில் காவல் தெய்வமான வைரவரின் திருவடியில் நாமும் எமது சிறுர்களும் சிரம் தாழ்த்தி நிற்பது எங்களது பாக்கியமே.

எமது பாடசாலை ஒவ்வொன்றிலும் ஒரு கோயில் அமைக்கப்பட வேண்டும் என்பதை இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இப்படி அவர் கூறினுர்.

புலவர் சி. செ. சோமசுந்தரத்துக்கு மாணவர் சங்கத் தலைவர் திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்க பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் தங்கப் பதக்கம் அணிந்து 'சிவனருட் செல்வன்' என்னும் பட்டத்தைச் சூட்டினுர்.

புலவர் சோமசுந்தரம் தனது நன்றியுரையில் கூறியதாவது;

இன்று நிறைவேறியுள்ள சிவஞான வைரவர் ஆலயப் பணியைப் பூர்த்தி செய்வதற்கு எனக்குத் தூண்டுகோலாய் இருந்தவர் அமரர் பி. எஸ். அவர்கள்.

என் பலத்தால் எதுவும் நடைபெறவில்லை. எல்லாம் அவன் செயல் என்றே கூற வேண்டும்.

சிவஞான வைரவர் ஆலயத்தை நாம் அமைத்தது எமது கல்லூரியின் நூற்றுண்டு விழாவுக்கு முன்னேற்பாடான ஒரு பெரிய கைங்கரியமாகும்.

இன்று தொடக்கம் எமது கல்லூரியில் திருமுறை ஒலியும் வேத ஒலியும் தினமும் ஒலிக்கும்.

எமது பீடைகள் யாவும் எம்மைவிட்டு அகலும்.

இப்படி அவர் கூறினுர்.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. சு. டிவகலாலா நன்றியுரை கூறினுர். [ச]

## புற்று ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, உடுவில், யாழ்ப்பாணத்திலும்—

வியாழக்கிழமைகளில் சங்கானை, ஊர்காவற்றுறை, கரவெட்டி, மருதங்கேணி, கோப்பாய், நல்லூரிலும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சந்திக்கலாம்.

வேலணை,நெடுந்தீவு நோயாளிகள் புதன்கிழமைகளில் யாழ் செயலகத்தில் மேற்படி உத்தியோகத்தர்களைச் சந்திக்கலாம்.

சகல பகுதி சமூகசேவைகள் உத்தியோகத்தர்களையும் புதன்கிழமைகளில் யாழ் செயலகத்தில் சந்தித்து சமூக சேவைகள் தொடர்பான விடயங்களை அறிந்துகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## சாக்கில். ,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விலிருந்து விடுதலையானவர்களை ''பெரியவர்'' அழைத்துவருமாறு கூறி நானும் ஏனைய 11 பேரும் அழைத்துச்செல்லப்பட்டோம்.

வெலிக்கந்தை, மன்னம்பிட்டி முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு இறுதியாக மின்னேரி முகாம் கொண்டு செல்லப்பட்டோம்.

அங்கு கைகளை பின்னுல் கட்டி விட்டு சாக்குக்குள் போட்டு தாக்கினுர்கள்.

மறுநாள் வாகனத்தில் ஏற்றி கைகளை அவிழ்த்து நடு வீதியில் இறக்கி விட்டனர் – இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-21)




## மரண அறிவித்தல்கள்

### மிருசுவில்
### சூசைப்பிள்ளை மேரிப்பிள்ளை
### (இராசம்)

காலம் சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவி மேரிப்பிள்ளை இராசம் காலமானுர். அன்னர் மில்விறெட், மாகிறெட்றூபி, அல்விறெட் துரைராசா (ஜேர்மனி), வினிவிறெட் அற்புதராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், மரியநாயகம் (ஜேர்மனி), செபஸ்தியாம்பிள்ளை (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), நீற்ரு (ஜேர்மனி), பெனடிக்ற் இரத்தினம் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி எலிசபேத்மனுவேற்பிள்ளையின் அன்புச் சகோதரியுமாவார்.

**அன்னரின் நல்லடக்கம் 13–04–1989 வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு மிருசுவில் சேமக்காலையில் நடைபெறும்.**

தகவல்:
குடும்பத்தினர்

தவசிகுளம்,
மிருசுவில்.

[148]

### திரு. க. செல்லத்துரை
[அதிபர், விக்னேஸ்வராக் கல்லூரி, சாவகச்சேரி]

காலஞ்சென்ற திரு. கந்தையா, திருமதி கந்தையாவின் புதல்வன் திரு. கந்தையா செல்லத்துரை [அதிபர், விக்னேஸ்வராக் கல்லூரி, சாவகச்சேரி] அகால மரணமானுர். இவர் திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், அகல்யா, கௌசல்யா, லாவன்ஜா ஆகியோரின் அருமைத் தகப்பனும், பிரபல வர்த்தகர் திரு. V. M. கணபதிப்பிள்ளை [சாவகச்சேரி] தம்பதிகளின் மருமகனும், பரமசாமி, நடராசா, மகாலிங்கம், குமாரவேலு, தவலோகேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், ஆசிரியர் கனகசந்திரன், கிருஷ்ணமூர்த்தியின் மைத்துனரும், ஜெயலக்ஷ்மி, புலேந்திரன், குலேந்திரன் சீதாலக்ஷ்மி, ராதாலக்ஷ்மி ஆகியோரின் அத்தானும், தர்மேந்திரன், யோகதாசன், வசந்தகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குலேந்திரன்

சரசாலை,
சாவகச்சேரி.

[10554]

### கதிரவேலு தம்பிப்பிள்ளை

கதிரவேலு தம்பிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் ராசம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, கைலேஸ்வரி, தவராசா, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வ. தங்கராசாவின் அன்பு மாமனுரும், தினேஸ், கஜேந்தா, சுஜாசினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 13 4-89 இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் அன்னரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
த. தவராசா
(மகன்)

மாசியப்பிட்டி
சந்தியடி,
சண்டிலிப்பாய்.

(146)

### சின்னத்துரை பாலசுப்பிரமணியர்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்துரை பாலசுப்பிரமணியர் (அஸ்பெற்றஸ் இன்டஸ்றீஸ்) 12 - 04 - 89இல் காலமானுர். இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், ஆதவன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), பாரதி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), இமயவன் (கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆ. சின்னத்துரை (சமாதான நீதிபதி , அன்னம்மாள் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், பாலகிருஷ்ணனின் (சவுதி) சகோதரரும், சிவராணியின் மைத்துனரும், ஜெயப்பிரகாஷ், பிரபா, சிவப்பிரகாஷ் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள்(13-4-89) வியாழக்கிழமை பி. ப 2-00 மணிக்கு உயரப்புலத்திலுள்ள அன்னரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஆ. சின்னத்துரை (சமாதான நீதிபதி)
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(139)

### செபமாலை நீக்கிலாப்பிள்ளை

உயிர்தராசன் குளத்தைச் சேர்ந்த செபமாலை நீக்கிலாப்பிள்ளை 12 - 04 - 89 இல் இளவாலையில் காலமானுர் இவர் விக்ரோரியா கத்தரினின் அன்புக் கணவரும், மேரியோசேப்பின், காலம் சென்ற மேரிமார்க்கிறேட் பிரான்சிஸ் சேவியர் ,இம்மானுவேல்( அமெரிக்கா), மேரிறேசலின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 13 - 04 - 89 இன்று பிற்பகல் 3.30 மணியளவில் இளவாலையில் நடைபெறும்.

தகவல்
பிரான்சிஸ் சேவியர்
[மகன்]

அத்துவாம்புலம்,
இளவாலை.

[10540]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 13 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org